பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 04, சனிக்கிழமை 19.11.2016 | கதிர் 13

பாரம்பரிய உயர்தர (இந்திய)
சைவ உணவகம்
யாழ் சுவையூற்று
இல.369, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே.: 0772335103

## மூன்றில் இரண்டு பங்கிலும் அதிகமான வாக்குகளுடன் நிறைவேறியது 'பட்ஜெட்'

### கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., இதொ.கா. ஆகியனவும் ஆதரவு

கொழும்பு, நவ.19

நல்லாட்சி அரசின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அதன் இரண்டாம் வாசிப்பின்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையிலும் விட அதிக வாக்குகளைப் பெற்று, 107 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 162 வாக்குகளும் எதிராக 55 வாக்குகளும் கிடைத்தன.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பி

பக்கம் 20 >>>

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் 32 இலங்கையர் இணைந்தனராம்!

### நீதியமைச்சர் நாடாளுமன்றில் பரபரப்புத் தகவல்

கொழும்பு, நவ.19

இலங்கையின் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்புடன் சேர்ந்திருக்கின்றனர் எனத்தகவல் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பரபரப்புத் தகவலை நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும் அந்த 32 பேரின் பெயர் விவரங்களையும் அவர் வெளியிடவில்லை.

நாடாளுமன்றத்தில் இடம்

பக்கம் 20 >>>

# மத அடிப்படைவாதத்துக்கு இனிமேல் அனுமதியில்லை

### கடும் நடவடிக்கை என்கிறார் நீதியமைச்சர்

கொழும்பு, நவம்பர் 19

**பௌத்த, இஸ்லாமிய அடிப்படை வாதங்களைச் செயற்படுத்த இன்றுமுதல் எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு செயற்படுவோருக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.**

**-இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் உறுதிபட அறிவித்தார் புத்த சாசன மற்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ.**

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தீர்வுமுயற்சிகளைமுன்னெடுப்பதில் அரசு தீவிரமாக இருக்கும் இந்தச் சமயத்தில் பௌத்த, இஸ்லாமிய அடிப்படைவாதப் போக்குடைய சில சக்திகளால் இன, மத வெறுப்புப் பிரசாரங்களும் அவற்றின் மூலம் இனக்குரோதமும் கிளறப்படும் சம்பவங்கள் நாட்டில் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இதனால் நாட்டில் இனப் பதற்றம் ஏற்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பக்கம் 20 >>>

## தாலி அறுத்த கொள்ளையர்கள் தோட்டைக் காதோடு பிடுங்கினர்!

### உரும்பிராயில் நேற்று மாலை சம்பவம்

உரும்பிராய் நவ.19

மோட்டார் சைக்கிளில் சென்ற கொள்ளையர்கள் வீதியால் பயணித்துக்கொண்டிருந்த பெண் ஒருவரின் தாலிக்கொடியை அறுத்ததுடன், காதில் இருந்த தோட்டையும் காதோடு இழுத்து அறுத்துச் சென்றனர்.

நகைகளை இழந்த பெண், காதில்

பக்கம் 20 >>>

## நல்லாட்சி அரசு மீது இன்னும் நம்பிக்கை இருக்கின்றது என்கின்றார் சேனாதிராஜா!

### தீர்வுக்கு வாய்ப்பளிப்பதற்காக பட்ஜெட்டுக்கு ஆதரவாம்

கொழும்பு, நவ.19

எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலை நீடிக்கிறது. அத்தகைய நிலையில் இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா என்று எமது உறுப்பினர்கள் கேட்கின்றனர். எனினும் தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம். அதனால் இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளோம். இந்தத் தேசிய அரசின் மீது இன்னமும் நம்பிக்கை உள்ளது.

பக்கம் 19 >>>

## அரசமைப்புச் சபை இன்று கூடுகிறது!

கொழும்பு,நவ.19

நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு மீண்டும் அரசமைப்புச் சபையாகக் கூடவிருக்கிறது.

அரசமைப்பை உருவாக்குவதற்காக அரசமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட வழிகாட்டல் குழுவின் தலைவர் என்ற முறையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வழிகாட்டல் குழுவின் கீழ் இயங்கும் 6 உப குழுக்களின் இடைக்கால அறிக்கைகளையும் இன்று அரசமைப்புச் சபையில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம், வழிகாட்டல்

பக்கம் 20 >>>

## வலி.கிழக்குப் பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் நேற்று அடாவடி!

### மாணவன் காயம்; 7 மாணவரும் ஓர் ஆசிரியரும் தடுத்துவைப்பு!!

மாணவன் ஒருவனைத் தாக்கிப் படுகாயப்படுத்திய ஆசிரியர் ஒருவர், ஏழு மாணவர்களையும் சக ஆசிரியர் ஒருவரையும் அறையொன்றில் வைத்துப் பூட்டி அட்டகாசம் புரிந்துள்ளார்.

இந்தச் சம்பவம், வலிகாமம் கல்வி வலயத்தில், கோப்பாய்க் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆசிரியரின் தாக்குதலில் காயமடைந்த மாணவன் முதலில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பக்கம் 20 >>>

### அளப்பு அருணாசலம்



அப்ப... கழுத்தோட வந்தது... காதோட போட்டுது எண்டு சொல்லுங்கோ...!

### தமிழக மீனவர்கள் மீது சூடு:

## பிரதமர் மோடியிடம் நேரில் அ.தி.மு.க. எம்.பிகள் முறையீடு

புதுடில்லி,நவ.19

தமிழ்நாடு காரைக்கால் மற்றும் நாகைப்பட்டினம் பகுதிகளில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற தமிழக மீனவர்கள் மீது கடந்த வியாழன் அதிகாலையில் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு மீனவர்கள் காயமடைந்தனர் என்று கூறப்படும் சம்பவம் குறித்து அ.தி.மு.க. வின் நாடாளு

பக்கம் 20 >>>

## இலங்கைக் கடற்படை சுட்டமைக்கு சாட்சியம் இல்லை என்கிறது இந்தியா

புதுடில்லி,நவ.19

"காரைக்கால் மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் இலங்கைக் கடற்படை சம்பந்தப்பட்டுள்ளது என்பதற்கான சாட்சியங்கள், ஆதாரங்கள் இல்லை."


– இவ்வாறு புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்தார்.

பக்கம் 20 >>>

# 16 மில்லியன் ரூபா செலவில் விதை சுத்திகரிப்பு நிலையம்

## கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் நேற்று திறந்துவைப்பு





கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் 16 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன விதை சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைந்த பண்ணையாளர்கள் சிக் கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்துக்கென இது நிர்மா ணிக்கப் பட்டது. வடக்கு விவசாய அமைச் சர் பொ.ஐங்கரநேசன் இதனை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைந்த பண்ணையாளர்கள் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளை ஒருங்கி ணைத்து அவர்களுக்கான தொழில்நுட்பஆலோசனைகளை வழங்குவதோடு தூய விதைக ளைப்பெற்றுக்கொடுப்பதற்கான பணிகளையும் முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில், விவசாயிக ளுக்கான விதை நெல்லை இச் சங்கம் குறைந்த செலவில் சுத்தி கரித்து வழங்கும் நோக்கில் வடம ாகாண விவசாயத் திணைக் களத்தின் ஊடாக விதை சுத்தி கரிப்பு நிலையம் உருவாக்கப் பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் அபிவிருத் தித் திட்டம், விதை சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டிடங்களை அமைக்க 11.6 மில்லியன் ரூபா வையும், சுத்திகரிப்பு இயந்தி ரங்களைக் கொள்வனவு செய்ய 4.4 மில்லியன் ரூபாவையும் வழங்கியுள்ளது.

இந்நிதிக்கு மேலதிகமாக பயிற்சி வகுப்புக்களுக்கென 5 லட்சம் ரூபாவையும் விதை சுத்தி கரிப்புக்குத் தேவைப்படும் பொருட்களின் கொள்வனவுக்கு 1மில்லியன்ரூபாவையும்வழங்கி உள்ளது. அத்தோடு விதை சுத்தி கரிப்பு நிலையத்தை சிறப்பாக நடாத்துவதற்கான முகாமைத் துவ ஆலோசனையை கைத் தொழில் பணியகத்தின் மூலம் வழங்கியுள்ளது.

விதை சுத்திகரிப்பு நிலையத் தின் திறப்பு விழா நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர் சு.பசுப திப்பிள்ளை, மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகு மார், பிரதி விவசாயப் பணிப்பாளர் பூ.உலகநாதன் ஆகியோரும், மத்தியவிவசாயத்திணைக்களத்தி ன்அதிகாரிகளும்,விவசாயிகளும் கலந்துகொண்டனர்.

விதை சுத்திகரிப்பு நிலை யத்துக்கான அடிக்கல் கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் நாட்டப் பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

(ம-70)

# அமெரிக்காவுக்கான முன்னாள் தூதர் டிசெம்பர் 2 வரை விளக்கமறியலில்!

கொழும்பு,நவ.19

அமெரிக்காவுக்கான முன் னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவை டிசம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுக்காலை நீதிபதி லங்கா ஜயரட்ன முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோதே அவரை விளக் கமறியலில் வைக்க உத் தரவிடப் பட்டது.

அவர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நாட்டில் இருந்து வெளியேற முற்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின ரால் கைது செய்யப்பட்டார்.

ஜாலிய விக்ரமசூரிய, அமெரிக் காவுக்கான இலங்கைத் தூதுவ ராக பதவியில் இருந்த காலத்தில் தூதுவராலயத்துக்கான கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கும் விடயத் தில் 32 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி மோசடியில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(முன்னர் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்) (ம)

# கதா காலம் விமர்சன அரங்கு

மஹாபாரதத்தின் மறு வாசிப்பு நவீனமான தேவகாந்தனின் 'கதாகாலம்' நூலின் விமர்சன அரங்கு இன்று மாலை 5.30 மணிக்கு, கல்வியங்காட்டுச் சந்தி, அருளம்பலம் ஒழுங்கையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் சமூகவள நிலையமான 'கருவி' மையத்தில் நடைபெறும்.

கோ.பத்மநாதன் தலைமை வகிப்பார். ராதேயன், சி.விம லன், செல்வி கௌதமி, செல்வ மனோகரன் ஆகியோர் உரை யாற்றுவர். நூலாசிரியர் தேவகாந் தன் பதிலுரையும் நன்றியுரையும் வழங்குவார்.

## நீதிமன்றை அவமதித்து செய்திகள்

# லங்கா ஈ நியூஸ் ஆசிரியரை கைதுசெய்ய நடவடிக்கை

கொழும்பு,நவ.19

நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக செய்திகளை வெளியிடும் லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் சந்த ருவன் சேனாதீர என்பவரை சர் வதேச பொலிஸ் ஊடாகக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வந்து சட்ட நடவடிக்கை எடுக்கப் பட வுள்ளது என நீதியமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில இணையத்தளங்கள் உண்மையற்ற மற்றும் அடிப்ப டைவாத செய்திகளை வெளியி டுகின்றன. இதனால் மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர் என்றும் நீதியமைச்சர் குற்றம் சாட்டினார்.

அத்துடன் நாட்டில் சில வெளி நாட்டு புலனாய்வு சேவைகள் இயங்குவதாகவும் அவர் கூறி னார். (ம)

# யாழில் சாடியில் வளர்க்கப்பட்ட மூன்று கஞ்சாக் கன்றுகள் மீட்பு



யாழ்ப்பாணம்,நவ.19

அரியாலை மணியந்தோட் டம் 2 ஆம் குறுக்குத்தெருவில் உள்ள வீடொன்றில் வளர்க்கப் பட்ட கஞ்சாக் கன்றுகளைக் கைப் பற்றிய யாழ்ப்பாணப் பொலி ஸார், அதை வளர்த்தவர் என்ற சந்தேகத்தில் இளைஞர் ஒருவ ரையும் கைது செய்துள்ளனர்.

அந்த வீட்டில் கஞ்சா வளர்க் கப்பட்டு வருவதாகப் பொலிஸா ருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை அங்கு சென்ற பொலிஸார் சாடி யொன்றில் வளர்க்கப்பட்டு வந்த கஞ்சாச் செடியை மீட்டனர்.

அந்தச் சாடியில் மூன்று கன் றுகள் வளர்க்கப்பட்டன. ஒவ் வொன்றும் தலா 18, 16, 12 சென்ரிமீற்றர் அளவுகளை உடையவை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சப் இன்ஸ் பெக்டர் சூரியகுமார் சொரூபன் தெரிவித்தார்.

கஞ்சாவை வளர்த்தவர் என்ற சந்தேகத்தில் 32 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் முடிவில் சந் தேக நபர் நீதிபதி முன்னிலை யில் ஆஜர்படுத்தப்படுவார் என் றும் அவர் கூறினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் 7 அடி கஞ்சாச் செடி ஒன்று கைப்பற் றப்பட்ட நிலையில், நேற்று யாழ்ப்பாணத் திலும் கஞ்சா கன் றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-09)

# ஆறுமுக நாவலர் மாநாடு மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.19

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநா டும் குருபூசை நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நல்லூர் துர்க்கா மணி மண்டபத் தில் இடம்பெற்று வருகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் காலை நிகழ்வுகள் தருமபுர ஆதீனத்தின் முனைவர் கயிலை ஸ்ரீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், நாயன்மார்கட்டு சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு ஆகம கிரியா யோதி சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவ குருக்கள் ஆகி யோர் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேரா சிரியர் சி.பத்மநாதன் தலை மையில் நடைபெறும்.

நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டா யுதபாணி பிரதம விருந்தினராக வும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபி விருத்தி, வீதி அபிவிருத்தி மற் றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தி யசீலன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், யாழ்.மற் றும் கொக்குவில் இந்துக்கல் லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.பஞ்சலிங்கம் மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் டி.மனோகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்து கொள்ள வுள்ளனர்.

காலை நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வரலாற்று அறிவுப் போட்டியில் திறமையை வெளிக் காட்டிய மாணவர்க ளைப் பாராட்டும் நிகழ்வும் இடம் பெறும்.

பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் " நாவலரின் தமிழ்க் கல்விப்பணி" என்னும் தலைப்பில் கருத்தரங்கம் இடம் பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கம் நிகழ் வில் பேராசிரியர் எஸ்.சிவலிங் கராஜா - "உரைப்பணி", பேரா சிரியர் வ.மகேஸ்வரன் - "பாட நூலாக்கம்" கலாநிதி க.இரகுபரன் - "இலக்கிணப்பணி", கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் - "பாடசாலை உருவாக்கம்", ஈ.குமரன் - "பதிப் புப்பணி" ஆகிய தலைப்புக்க ளில் கருத்துரைகளை வழங்குவர்.

மாலை நிகழ்வுகள் 4 மணிக்கு தருமபுர ஆதீனத்தின் முனைவர் கயிலை ஸ்ரீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், சின்மய மிஷன் வதிவிட ஆச்சாரியார் வண.ஜாக்கிரத சைதன்யா சுவாமி கள் ஆகியோர் முன்னிலையில் வடமாகாண ஆளுநரின் செய லாளர் இ.இளங்கோவன் தலை மையில் இடம்பெறும்.

நிகழ்வில் வடமாகாண ஆளு நர் கௌரவ ரெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராகவும், நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் ந.கருணை ஆனந்தன் கௌரவ விருந்தினராகவும், தருமபுர ஆதீ னத்தின் பன்னிரு திருமுறை மொழிபெயர்ப்பு இணைப்பாளர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், நொதேர்ன் சென்றல் தனியார் வைத்தியசாலை உரிமையாளர் எஸ்.சாமி மற்றும் சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்க ளாகவும் கலந்து கொள்ளவுள் ளனர்.

மாலை நிகழ்வுகளில் "திரு வாசகம்'' (சிங்கள மொழி பெயர்ப்பு) "பாலபாடம்" - முதலாம், இரண்டாம் புத்தகங்கள், "பால பாடம்" - மூன்றாம், நான்காம் புத்தகங்கள் "நாவலர் நினைவு மலர்'' ''Navalar by Muthukumara Swamy", "ஆறுமுக நாவலர் சரிதம்" ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.


நூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாக ரூபன் வழங்குவார்.

தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வரலாற்று அறிவுப் போட் டியில் திறமையை வெளிக் காட்டிய மாணவர்களைப் பாராட் டும் நிகழ்வும், வித்துவான் கலா பூஷணம் திருமதி.வசந்தா வைத்தி யநாதன் தலைமையில் உரை யரங்கும் இடம்பெறும்.

இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் திருமதி கநிர்மலா நன்றியுரையை நிகழ்த்துவார்.

# ஆவா குழு என்பது அரசின் ஒட்டுக்குழு

## சிவமோகன் எம்.பி.குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்,நவ.19

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்ற ஆவாக் குழு இலங்கை அரசின் ஒட்டு குழுவே. இவர்கள் ஆவா குழு என்ற பெயரில் மாத்திரமன்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் 'இரும்புக்குழு' என்ற பெயரிலும் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் சாடியுள்ளார்.

ஆவா குழு சந்தேக நபர்கள் என்ற போர்வையில் வடக்கில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர், சிவமோகன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆவா குழு என்ற விடயத்தில் நாங்கள் பார்க்க வேண்டிய விடயம் என்னவெனில், இதில் இருப்பவர்கள் தமிழர்களாக இருக்கலாம். ஆனால் நிச்சயமாக இவர்கள் இலங்கை இராணுவத்தின் ஒட்டுக்குழுக்கள் தான்.

ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் மோட்டார் சைக்கிள்களில் செல்வதுடன் இவர்கள் வாள் வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறு வாள் வெட்டில் ஈடுபடுபவர்கள் தப்பிச் செல்லும் போது பல தடை முகாம்களைத் தாண்டியே செல்ல வேண்டும். இவர்கள் செல்லும் போது தாம் வைத்திருக்கும் அடையாள அட்டைகளைக் காட்டியே தப்பிச் செல்கின்றனர். இது தான் முன்னரும் நடைபெற்றது. தற்போதும் நடைபெறுகின்றது.

ஆனால் ஆவா குழு உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் ஒன்றும் அறியாத தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து அவர்களைப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பதானது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போது அவர்கள் மீது பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. பின்னர் இவர்கள் விசாரணை என்ற போர்வையில் தடுத்து வைக்கப் பட்டு ஆவா குழு உறுப்பினர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களை நாங்கள் விடுதலை செய்வோம் என்று தெரிவித்து பலவந்தமாக கையெழுத்துப் பெறுகின்றனர்.

இதுவரை தமிழ் மக்களை -தமிழ் இளைஞர்களைக் கைது செய்து எவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருக்கின்றார்களோ அதே போன்று தற்போது இந்த அப்பாவி இளைஞர்களைச் சிக்க வைக்கின்றனர்.


பின்னர் இதனை ஒரு தமிழ் மக்கள் சார்ந்த, விடுதலைப் புலிகள் சார்ந்த விடயமாக சித்திரிக்க முயல்கின்றனர். நிச்சயமாக இது அவ்வாறானதொரு விடயமல்ல.

பயங்கரவாத தடைச்சட்டத்தை விடுத்து சாதாரண சட்டத்தின் கீழ் இந்த ஆவா குழு சந்தேக நபர்களைக் கொண்டு சென்று பகிரங்கமாக நீதிமன்றத்தில் வைத்து விசாரிப்பார்களேயானால் அந்த விடயங்களில் உண்மை இருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். என்றார். (ஐ-81)

## வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் ஐவரின் படுகொலை நினைவு...







வவுனியா, நவ.19

வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்ட 10 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று கல்லூரியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா விவசாய கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் நினைவாக இரத்த தானம், தாக சாந்தி வழங்கல் என்பன இடம் பெற்றன.

கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வவுனியா, விவசாயக் கல்லூரிக்கு அண்மையில் இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து விவசாய கல்லூரியில் நின்ற மாணவர்களை விரட்டியும், அழைத்தும் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10 மாணவ, மாணவிகள் காயமடைந்தனர்.

இம் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்று அவர்களது மரணத்துக்கு நீதி கிடைக்காத 10 ஆவது ஆண்டு நினைவு நாள் உணர்வெழுச்சியுடன் கல்லூரியின் பழைய மற்றும் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் கண்ணீருக்கு மத்தியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், கல்லூரி உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

## தமிழ் தேசிய கீதம் பாடியது தொடர்பான வழக்குத் தள்ளுபடி

கொழும்பு,நவ.19

இந்த வருட சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தை தமிழில் பாடியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் அடங்கிய குழுவால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மனு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 7 ஆவது பந்தியின் 3 ஆவது சரத்துப் படி தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படலாம் என சட்டமா அதிபர் விவாதித்துள்ளார்.

தேசிய கீதத்தை தமிழில் பாடியமையில் என்ன அடிப்படை மனித உரிமை மீறப்படுகின்றது என சட்டமா அதிபர் இதன் போது கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த அடிப்படை மனித உரிமை மனுவை களனியை சேர்ந்த மூவரே தாக்கல் செய்திருந்தனர். இலங்கை அரசமைப்பின் படி, தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் மாத்திரம் பாட வேண்டும் என்று அவர்களின் மனுவில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### யாழ். பல்கலைக்கழக இரு மாணவர்கள் படுகொலை வழக்கு:

# ஐந்து பொலிஸாருக்கும் டிசெ. 2 வரை விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பொலிஸாரையும் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்

யாழ். கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களான விஜயகுமார் சுலக்ஷன் மற்றும் நடராஜா கஜன் ஆகியோர் பொலிஸாரினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தனர்.

சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களென கருதப்பட்டு சந்தேகத்தின் பேரில் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் எடுத்துக் கொள் ளப்பட்டது.



பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் 6 பேர் கொண்ட சட்டத்தரணிகள் குழுவினரும், சட்டமா அதிபர் சார்பில் 3 சட்டத்தரணிகளும், குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவால் படுகொலைக்குப் பின்னர் மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் அரசபகுப்பாய்வுத்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன, சம்பவம் இடம்பெற்ற பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் பொருத் தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவின் வன்பொருள் பெறப் பட்டு, கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பீடத்துக்குப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேநேரம், சந்தேக நபர்களின் தொலை பேசி இணைப்புக்கள் உரிய தொலைத் தொடர்பு நிறுவனங் களிடம் இருந்து தகவல் பெறப்பட்டு அதனடிப்படையில் விசா ரணைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே வேளை சம்பவத்தில் பலியாகிய மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மன்றில் தெரி வித்தனர்.

மேலும் பொலிஸ் திணைக்களத்தால் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளவதற்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற் றைய தினம் வெள்ளை அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் வாக்கு மூலம் பெறுவதற்கான திகதிகளை ஒதுக்கித்தருமாறு நீதிமன்றிடம் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்படி எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் இவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் தெரிவித்தார் அத்துடன் சந்தேக நபர்களின் விளக்க மறியலை டிசெம்பர் மாதம் வரை வரை நீடித்தும் உத்தரவிட்டார். (ஐ-10-18)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## அமைதி முயற்சிகளில் நம்பிக்கை கொள்வதற்கு ஏதுநிலை இல்லை!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்முயற்சிகள் தீர்க்கமான ஒரு கட்டத்தை நோக்கி நகர்வது போன்ற தோற்றப்பாடு வெளியே காட்டப்படுகின்றது.

தோற்றுவது கானல் நீரா அல்லது நிஜ நீர் நிலையா என்ற சந்தேகம் போல இப்போது அமைதி முயற்சிகள் தொடர்பில் காட்டப்படும் சமிக்ஞைகள் குறித்து தமிழர்களுக்குத் தொடர்ந்தும் சந்தேகம் நீடிக்கின்றது என்பது உண்மையே.

இப்போதைய அமைதி முயற்சிகளில் நல்லாட்சி அரசு நேர்மைத் தன்மையுடன் ஈடுபடுகின்றது, ஆரோக்கியமான நிலையில் அந்த முயற்சிகள் நகர்கின்றன என்றெல்லாம் தமிழ்த் தலைமைகளால் கூறப்பட்டாலும், அவற்றை முழு அளவில் நம்பும் நிலையில் தமிழர்கள் இல்லை.

ஏனெனில் அவர்களின் கடந்த கால கசப்பான அனுபவம் - பட்டறிவு - அப்படியான சந்தேகத்தை அவர்களுக்குத் தந்து நிற்கின்றது.

கடந்த எழுபது ஆண்டுகளாக எத்தனை சமாதான முயற்சிகள், எத்தனை சுற்றுப் பேச்சுகள், எத்தனை வட்டமேசை மாநாடுகள், எத்தனை அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் என்று இத்யாதி, இத்யாதி முயற்சிகள் எல்லாவற்றையும் - கண் துடைப்பு நாடகங்கள் பலவற்றையும் - கண்டு இறுதியில் ஏமாந்தவர்கள் அல்லவா அவர்கள்?

இன்று தமிழர்களின் தரப்புத் தலைவராக அரசுத் தரப்புடன் அமைதி முயற்சிகளில் ஈடுபடும் சம்பந்தர் ஐயா போன்றுதான் அன்று தந்தை செல்வாவும், அண்ணன் அமிர்தலிங்கமும் நம்பிக்கையுடன்தான் பல சுற்று முயற்சிகளில் - பல மட்டப் பேச்சுக்களில் - இலங்கையை மாறி, மாறி ஆண்ட பல அரசுத் தலைமைகளுடன் ஈடுபட்டனர்.

ஆனால், கடைசியில் கண்டது என்ன? வெறும் பூஜ்ஜம் என்பதே நிலைமை.

தமிழர் தரப்பின் அனைத்துக் கட்சிகளும் (அப்போதிருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தவிர்ந்த சகல தரப்புகளும்) ஒன்றாக இலங்கை அரசுத் தரப்புடன் அமர்ந்து பேசியது திம்புவிலாகும். அது 1985 ஜூலையில் நடந்தது.

அப்போது தமிழர் தரப்பு தனது நான்கு அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்தது. அதில் நாலாவது கோரிக்கை மலையக மக்களின் குடியுரிமைப் பிரச்சினை சம்பந்தப்பட்டது. அது இப்போது ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டுவிட்டது. மற்றைய மூன்றும் வடக்கு, கிழக்கில் வதியும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பானவை:-

ஒன்று - இலங்கைத் தமிழ் மக்கள் தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளல்.

இரண்டாவது - தமிழ் மக்களுக்கு இனம் காணக்கூடிய தனித்துவமான தாயகம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

மூன்று - தமிழர் தேசத்துக்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

ஆனால், எடுத்த எடுப்பிலேயே திம்புவில் அந்தக் கோரிக்கையை அடியோடு நிராகரித்தது அப்போதைய ஜே.ஆர். அரசு.

ஆனால், அடுத்த இரண்டு வருடங்களில் 1987 ஜூலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் அந்தப் பிரதான கோரிக்கைகளில் முதல் இரண்டையும் அதே ஜெயவர்த்தனா அரசு, சர்வதேச மட்ட உடன்பாடு மூலம் ஏற்றுக்கொண்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் முன்னுரை இந்த இரண்டு விடயங்களையும் தெளிவாக அங்கீகரித்து நிற்கின்றது.

இதன் பின்னர் சரியாக 15 ஆண்டுகள் கழித்து, 2002 டிசெம்பரில் ஒஸ்லோ அறிக்கையில் ஒப்பமிட்டு இணங்கியதன் மூலம் தமிழருக்கு (உள்ளக)சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை இலங்கை அரசு ஒப்புக்கொண்டது.

ஆக, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமும் இந்தியாவின் பங்களிப்புடனும், ஒஸ்லோ அறிக்கை மூலம் நோர்வேயின் பங்களிப்புடனும், திம்புப் பேச்சில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழரின் பிரதான கோட்பாடுகள் யாவற்றையும் - மூன்றையும் - சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொண்டு, அவற்றை வழங்க உறுதியளித்து, இணங்கியது இலங்கை.

ஆனால், பின்னர் நடந்தது என்ன? இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேரம் பேசலில் தமிழர் தரப்புக்கு இருந்த ஆயுத வலிமை என்ற பலம் சிதறடிக்கப்பட்டமையுடன், இந்த இணக்கம் எல்லாம் - சர்வதேச மட்டத்தில் எழுத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்பாடுகள் அனைத்தும் - இலங்கைத் தரப்பால் காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டது.

இப்போது பேச்சு மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடர்ந்து நடக்கிறது.

தமிழரின் பேரம் பேசும் வலு இப்போது வெறும் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலம் என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது. இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் இணைந்து அமைத்திருக்கும் நல்லாட்சி அரசில்,அந்த நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையும் காத்திரமான வலுவாகக் கணிக்கப்படக் கூடியதல்ல.

அதே சமயம், ஒரு பக்கம் தமிழருடன் அமைதி முயற்சி, இணக்கப் பேச்சு, சமாதான எத்தனம் என்றெல்லாம் கோடி காட்டும் நல்லாட்சி அரசு...

மறுபக்கம், எட்டப்படக் கூடிய இணக்கத் தீர்வை போட்டுடைக்க வைக்கும் தகுதி நிலையுடைய பேரினவாத சக்திகள் ஒன்று திரண்டு, மேலெழும்புவதற்கான களச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு, அதனை முளையில் கிள்ளி எறியாமல் வாளாவிருக்கும் நல்லாட்சி அரசின் மெத்தனப் போக்கு.

இவற்றுக்கு மத்தியில் நடைபெறும் அமைதி முயற்சியின் மீது தமிழர்கள் நம்பிக்கை கொள்வது என்பது எங்ஙனம் சாத்தியம்? பொருத்தம்...?

# அட்டாளைச்சேனை கடற்கரையில் தொடரும் மணல் திருட்டு !



அம்பாறை அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை கடற்கரை மற்றும் வடிச்சலடி, மடுவத்தடி பகுதியில் நாளாந்தம் இரவில் இருந்து அதிகாலை வரை கடல் மண் திருட்டு நடைபெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் ஒரு குழுவினர் ஈடுபடுவதோடு, நாளாந்தம் இரவு வேளைகளில் உரப்பைகளில் கடல் மண் நிரப்பப்பட்டு ஓட்டோ மற்றும் உழவு இயந்திரங்களில் ஏற்றி விற்பனை செய்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்த மண் திருட்டு இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை இடம்பெறுகிறது என்று தகவல்க்ள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, இந்தச் செயற்பாட்டைத் தடுக்க எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இதைத் தடுக்காது விட்டால் கடல் அரிப்பு ஏற்பட்டு விடும் என்று பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.இது குறித்து பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்புத்தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் அதிகாரிகள் பற்றாக்குறை இருந்து வருவதால் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று கூறப்பட்டது. (ஐ)

# 26,000 இலங்கையர் மலேசியாவில் தங்க அங்கீகாரம்

### ஐ.நா. முகவர் அமைப்பு வழங்கியது

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மலேசியாவில் தங்கியிருப்பதற்கு 26,615 இலங்கை அகதிகளுக்கு, அகதிகளுக்கான ஐ.நா முகவர் அமைப்பு (யு.என்.எச்.சி.ஆர்.)அங்கீகாரம் அளித்துள்ளது என்று மலேசிய அரசு அறிவித்துள்ளது.

மலேசியப் பிரதமர் செயலக அமைச்சர் டருக் சேரி சஹிடான் காசிம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

2010ஆம் ஆண்டு தொடக்கம், இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையான காலத்தில், மலேசியாவில், தங்கியிருப்பதற்காக 888,294 அகதிகளின் விண்ணப்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா முகவர் அமைப்பு அங்கீகாரம் அளித்துள்ளது.

இவர்களில், 824,419 பேர் மியான்மாரைச் சேர்ந்த அகதிகளாவர். மியான்மாரை அடுத்து, இலங்கை அகதிகளுக்கே அதிகளவில் மலேசியாவில் புகலிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில், இலங்கையைச் சேர்ந்த 26,615 அகதிகளுக்கு மலேசியாவில் தங்குவதற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

அதையடுத்து சோமாலியா, பாகிஸ்தான், ஈராக் மற்றும் ஏனைய நாடுகளின் அகதிகளுக்கும் மலேசியாவில் தங்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது எனவும் மலேசிய அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மத்திய வங்கியின் அதிகாரக்குறைப்பு தவறானது என்று வழக்குத் தாக்கல்

### பந்துல குணவர்த்தனவின் மனுவில் நிதியமைச்சரும் பிரதிவாதி

கொழும்பு, நவ.19

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் மத்திய வங்கிக்குள்ள அதிகாரங்களைக் குறைப்பதற்குறிய யோசனை அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் பிரதிவாதிகளாக இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

அண்மையில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 2017ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட யோசனை மூலம் வரி அறவிடும் அதிகாரத்தை வங்கிக் கட்டமைப்பில் இருந்து நீக்கி வேறு தனியார் நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

இதனூடாக அரசமைப்பின் கீழ் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டுள்ள மனுதாரர், அதனால் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று தீர்ப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் குறித்த மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை அந்த தனியார் நிதிப் பிரிவு செயற்படுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரரான நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முஸ்லிம் உணர்வுகளைத் தூண்ட சதி செய்வோரை அம்பலப்படுத்துங்கள்

### முன்னாள் அமைச்சர் அஸ்வர் வற்புறுத்து

முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டிவிட சதி செய்பவர்கள் யார் என்பதை அரசு உடன் வெளியிடவேண்டும். முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபரும் முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சருமான ஏ.எச்.எம்.அஸ்வர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தபால், தபால் சேவைகள் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்த கருத்து தொடர்பாகவே அஸ்வர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டிவிட சதி செய்யப்பட்டு வருவது உளவுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் அம்பலமாகியுள்ளது என்று முஸ்லிம் விவகார, தபால் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலிம் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

சம்பந்தப்பட்ட சதிகாரர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் அறியவேண்டும். இதற்கான விளக்கத்தை அரசு உடன் அளிக்க வேண்டும்.

சில காலமாக சியோனிய மொஸாத் உளவுப் பிரிவினர் நம் நாட்டில் உலாவி வருகின்றனர் என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்திகள் வெளியாகின. மொஸாத் படையின் அதிகாரி வலைப்பின்னல் நம் நாட்டில் முஸ்லிம்களைக் குறி வைத்துத் தான் நடைபெறுகிறது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

மறைந்த அமைச்சர் காமினி திஸநாயக்கவே, விக்டர் ஒஸ்டோர்ஸ்கி என்பவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ள விவரங்களை அன்று வெளியிட்டார்.

புலிகளுக்கும் அரச படைகளுக்கும் ஒரே நேரத்தில் ஒரு மதிலின் இரு புறமிருந்து யுத்த பயிற்சியளிக்கப் பட்ட விவரமும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

அமைச்சர் ஹலீம் தெரிவித்துள்ள செய்தியின் அடிப்படையில், சதிகாரக் கும்பலை இனம் காணவேண்டும் . – என்று அவர் கூறினார். (ஸ)

### நாளை

20.11.2016
ஞாயிற்றுக்கிழமை
திதி : ஷஷ்டி முற்பகல் 8.53 வரை
நட்சத்திரம் : பூசம்
மு.ப. 10.22 வரை
சுபநேரம் 09.09 –10.39
இராகுகாலம் 4.39 – 6.39

# இனவாதத்தை தூண்டுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை!

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு



கொழும்பு, நவ.19

இனவாதத்தை தூண்டு வோரை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு ஜனாதிபதி இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் நேரடியாக பிறப்பித்துள்ளார்.

பாதுகாப்பு சபைக் கூட்டத்தை தொடர்ந்து இடம்பெற்ற விசேட கூட்டம் ஒன்றை அடுத்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு நேரடியாக இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன் இனவாதத்தை கட்டுப்படுத்த விசேட சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வருமாறும் இதன் போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் பாதுகாப்பு சபைக்கூட்டம் இடம் பெற்றன. இதன் போது தேசிய மட்டத்தில் ஆராயப்பட வேண்டிய பல விடயங்கள் ஜனாதிபதி முன்னிலையில் இடம்பெற்றன.

இதனையடுத்து இடம்பெற்ற விசேட கூட்டத்தில் ஜனாதிபதி, அமைச்சர் மனோ கணேசன், சிறைச்சாலைகள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, தேசிய கலந்துரையாடல் நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம், கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் ஆகியோருடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன் போது ஜனாதிபதியின் செயலாளர் பி. பீ. அபேகோன், பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த சில்வா, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்தன, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆகியோரும் பாதுகாப்பு படையினரின் பிரதா னியான எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலக உள்ளிட் டோரும் பங்கேற்றுள்ளனர். இந்த கூட்டத்தின் போது தற் போது நாட்டில் அதிகரித்துள்ள இனவாத சக்திகளின் ஆதிக்கம் தொடர்பில் விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

அமைச்சர்களான மனோ கணேசன், டி.எம்.சுவாமி நாதன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் உள்ளிட்டோரால் சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரித்துள்ள இனவாத சக்திகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு நேரடியாக கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர், பொது பல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகி யோரின் கருத்துக்கள் அச்சுறுத்தல் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட இனவாத கருத்துக்களை தூண்டியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமா அத்தின் செயலாளர் அப்துல் ராசிக் மற்றும் இனவாத செயற்பாட்டாளரான டான் பிரியசாத் ஆகி யோரின் விடயங்கள் குறித்தும் பேசப்பட்டுள்ளன.

இதன்போது இனவாதம் ஊடாக அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உட்படுத்தும் நிகழ்ச்சி நிரல் தொடர்பிலும் அதனால் நாட்டில் ஏற்பட போகும் பாதிப்புக்கள் குறித்தும் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் போது இனவாதம் பேசுவோர் மற்றும் அதனை தூண்டுவோருக்கு எதிராக கடுமையான தண்டனைகளை விதிக்கும் விதமாக உரிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுவந்து அதனை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்போது தற்போதும் அப்பணி இடம்பெற்று வருவதாகவும் மிக விரைவாக அச்சட்டம் நடைமுறைக்கு வரும் வண்ணம் நடவடிக்கைகள் டுக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் விஜேதாஸ ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கும் ஏற்பாடுகள் உள்ளன என்றும் நீதியமைச்சர் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு விசேட உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறப்பித்தார். மேலும், இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மற்றும் அவற்றைத் தூண்டுவோருக்கு எதிராக புதிய சட்டம் தயாராகும் நிலையில் தற்போது அந் நடவடிக்கை களில் ஈடுபடுவோருக்கு எதிராக தற்போதைய சட்டத்தின் கீழ் தயவு தாட்சண்யம் இன்றி உடனடி நடவடிக்கை எடுக்கு மாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதனை பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## அறிவை பொதிசெய்து விற்க நல்லாட்சி அரசாங்கம் முயற்சி

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.19

நல்லாட்சி அரசாங்கம் பணிஸை உற்பத்தி செய்து பொதிச்செய்து விற்பனை செய்யலாம். ஆனால், இந்த அரசாங்கம் அறிவை பொதிசெய்து விற்பனை செய்வதற்கு முயற்சிக்கின்றது என்றும் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தின் இறுதிநாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் தேலும் உரையாற்று கையில்;

தனியார்மயப்படுத்தல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கொண்டிருக்கின்றது.

அறிவு என்பது ஒரு பொருள் அல்ல. அதனை ஒருவரிடம் இருந்து பறிக்கமுடியாது. மற்றொருவருக்கு பலவந்தமாக கொடுக்கவும் முடியாது. எனினும், தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவி, அறிவை விற்பனை செய் வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுக்கான ஒதுக் கீட்டை கடந்த வருட ஒதுக்கீட்டுடன் ஒப்பிட்டு பார்த்தால் ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது குறைவாகும்.

இருக்கின்றவர்கள் கற்பதற்கும், இல்லாதவர்கள் கற்காமல் விடுவதற்கும் ஏற்றவகையிலேயே கல்விக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் இருந்து கல்விக்கற்று முன்னேறு பவர்களின் பாதை மூடப்பட்டு கொண்டு வருகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

## ஐக்கிய அமெரிக்காவிற்கான முன்னாள் தூதர் கைது



கட்டுநாயக்கா, நவ.19

ஐக்கிய அமெரிக்கா விற்கான முன்னாள் இலங்கை தூதர் ஜாலிய விக்கிரமசூரிய, நிதி குற்றப் புலனாய்வு விசாரணை பிரி வினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

நிதியை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டின் பெயரில் இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சென்னையிலிருந்து ஹெரோயின் குளிசைகளை விழுங்கிவந்த நபர் கைது

கட்டுநாயக்கா, நவ.19

இந்தியாவில் இருந்து ஹெரோயின் குளிசைகளை விழுங்கிய நிலையில் இலங்கைக்கு வந்த வயோதிபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் சென்னையில் இருந்து நேற்று முன்தினம் மதியம் இலங்கை வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய இந்தச் சந்தேகநபர் விழுங்கி வந்த ஹெரோயின் குளிசைகளை அகற்றுவதற்காக, நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று விமானநிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் விழுங்கியிருந்த ஹெரோயின் குளிசைகளில் 5 ஹெரோயின் குளிசைகள் அகற்றப்பட்டு விட்டன என்றும், மேலும் அவர் பரிசோதனைக்கு உட்டுத்தப்பட்டு வருகிறார் என்றும் விமானநிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## ஹொரணை கோர விபத்தில் ஒருவர் பலி

ஹொரணை, நவ.19

ஹொரணை – பெல்லபிடிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபர் ஒருவர் பலியாகியுள்ளார். கார் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஹொரணைப் பிரதேசத்தில் இருந்து புலத்சிங்கள பிரதேசம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டுள்ள நிலையில், எதிர்திசையில் வந்துள்ள மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தெல்மெல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, காரின் சாரதி கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஏழைகளுக்கு விமோசனம் இல்லை இது மக்களை ஏமாற்றும் 'பட்ஜெட்' !

## முஸ்லிம் உலமா கட்சி தெரிவிப்பு



துறைநீலாவணை, நவ.19

நிதி அமைச்சரினால் விதந்துரைக்கப்பட்டது போன்று 'பட்ஜெட்' ஏழை மக்களுக்கு விமோசனம் தருவதாக இல்லை என முஸ்லிம் உலமா கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி அக்கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தாவது:-

நிதி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட 'பட்ஜெட்' அரசுக்குரிய நிதிகளை சேர்ப்பதற்குரிய மூலாதாரங்களை உருவாக்கியுள்ளதே தவிர நாட்டின் பெரும்பான்மையான ஏழைகளுக்கு விமோசனத்தை தரவில்லை. மக்களை ஏமாற்று முகமாக ஐந்து ரூபா பத்து ரூபா விலைக் குறைப்பு மட்டுமே என பிச்சை போடப்பட்டுள்ளது.

கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஊதாரித்தனமாகச் செயற்படுகின்றது என்றும் மஹிந்தவின் குடும்பத்துக்கான செலவை நிறுத்தினால் போதும் நாட்டை வாழ வைப்போம் எனவும் இன்றைய பிரதமர் அன்று கூறியிருந்தார். இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் நெருங்கிய நிலை யில் மஹிந்த காலத்தை விட பொருள்களின் விலைகள் எகிறியுள்ளன.

இதற்கு மஹிந்த ராஜபக்ஷ நிறைய கடன்களை ஏற்படுத்தியிருந்தார் எனச் சொல்வது 'வேலைக்கள்ளிக்கு பிள்ளைச் சாட்டு' என்பதாகும் மஹிந்தவின் காலத்தில் திறைசேரியின் நிலை எப்படி, வெளிநாட்டுக் கடன்கள் எப்படி என்பது பகிரங்கமாக தெரிவித்த நிலையில் தாம் அரசைப் பொறுப்பேற்றால் இதனை மாற்றுவோம் என ஆட்சிக்கு வந்தபின் மஹிந்தவின் கடனைப் பற்றிக்கூறி சமாளிக்க முனைவது தமது கையாலாகாதனத்தை மறைக்கும் முயற்சியாகும்.

தற்போது மஹிந்த குடும்பம் ஆட்சியில் இல்லை என்பதால் இந்த இரண்டு வருடங்களின் அரசாங்கத்தினால் நிதி வருமானத்தை பெறமுடியாது போய் விட்டது என்றால் மஹிந்த குடும்பம் என்ற குற்றச்சாட்டு பொய்யானது என நிரூபிக்கப்படுகிறது.

இன்று அனைத்து பொருள்களும் விலையேற்றம் பெற்றுள்ளன என்பதை எந்த ஊடகமும் மறுக்க முடியாது. காரணம் மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இருந்ததைவிட பத்திரிகைகளின் விலைகள் இந்த ஆண்டு அதிகரிக்கப்பட்டுள்ளன, நல்லாட்சி அரசை கொண்டுவர ஒத்துழைத்த செய்தித்தாள்களுக்குக்கூட இந்தப் 'பட்ஜெட்'டில் விமோசனம் கிடைக்கவில்லை. அதே போல் போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கான தண்டப்பணத்தை 2500 ரூபாவாக ஆக்கியிருப்பதன் மூலம் பொலிஸாருக்கு லஞ்சத்துக்குரிய வாசலை நல்லாட்சி திறந்துவிட்டுள்ளது நாட்டில் போக்குவரத்துப் பொலிஸார் சட்டப்படி வேலை செய்வது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான்.

ஏனெனில் அம்மாகாண மக்கள்தான் மொழி புரியாத தன் காரணமாக தமது தரப்பு நியாயங்களை விளக்க முடியாமல் போனால் போகிறது என தண்டப் பணத்தை அல்லது பொலிஸாரை சரியாகக் கவனித்து விட்டு போவதை காணமுடிகிறது என்று தெரிவித்தார். (இ-151)

## உலக அஞ்சல் தினம் திருமலையில்; நாளை நிகழ்வு

நிந்தவூர், நவ.19

கிழக்கு மாகாண உலக அஞ்சல் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலகம், கிழக் கு மாகாண அஞ்சல் அலுவலகங்கள், மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகங்களுடன் இணைந்து இந்த மாகாணமட்ட உலக அஞ்சல் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் திருமதி ஜே. திருச்செல்வம் தலைமையில், திருகோணமலை சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் பிரதான நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

நிகழ்வில் அஞ்சல் மா அதிபர் டி.எல்.பி.ஆர்.அபேயரத்ன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். அஞ்சல் திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த உலக அஞ்சல் தின நிகழ்வின்போது உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கௌரவிப்பு , சிறந்த அஞ்சலக கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-ச-150)

## கிழக்கில் 19 மருந்தாளர்களுக்கு நியமனம்



கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மருந்தாளர்கள் 19 பேருக்கு மாகாண சுகாதார அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை நியமனங்கள் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் மருந்தாளர்களுக்கான 77 வெற்றிடங்கள் காணப்படும் போதிலும்,19 பேருக்கே தற்போது மருந்தாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய58 வெற்றிடங்களும் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் நிரப்பப்படும் எனக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார். (ச)

## மூன்று நூல்கள் நாளை வெளியீடு

நிந்தவூரைச் சேர்ந்த எழுத்தாளரும், கவிஞருமான ராஜகவி ராஹிலின் மூன்று நூல்களின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருக்கின்றது.

ராஹில் எழுதிய "மிட்டாய் மலை இழுத்துச்செல்லும் எறும்பு" (நாவல்), "யாழ் மீட்டிய கண்கள்", (பயண அனுபவக் கட்டுரை), "தேவதையின் அந்தப்புரத்தில் பட்டாம்பூச்சிக் குடியிருப்பு" (கவிதை) ஆகிய மூன்று நூல்களின் அறிமுக விழாவே நடைபெறவுள்ளது.நிந்தவூர் பிரதேச சபை உள்ளக அரங்கில் இந்த அறிமுகவிழா இடம்பெறவுள்ளது..

## கிழக்கில் தொடரும் மழையால் நெல் விதைப்பில் பெரும் பாதிப்பு

அம்பாறை, நவ.19

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் பெருமழையால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய பெருமழை தொடர்ந்தவண்ணமுள்ளது.

வங்காள விரிகுடாவின் தென் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகவே தொடர்ச்சியான பெருமழை பெய்து வருவதாக வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்பு வேலை கள் மும்முரமாக இடம்பெற்று வந்த நிலையில் பெருமழை தொடர்வதால் விதைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே விதைப்புவேலைகள் நடைபெற்ற நெற்காணிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சிறிய நெற்பயிர்கள் அழிவுறும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக விவ சாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-ச-150)

## வீடுகள் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த 'கில்லாடி' கைது!

வவுணதீவு, நவ.19

வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள கரவெட்டி, விளாவெட்டுவான் ஆகிய கிராமங்களில் மானிய அடிப்படையில் வீடு பெற்றுத்தருவதாகக் கூறி பணமோசடி செய்த ஒருவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப நபர், மாவட்ட வீட்டுத்திட்டம் தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்தர் எனவும் வீடுகள் வழங்கப்படாதோருக்கு அவர்களது நிலைமைகளை பரிசீலனை செய்து வீடுகள் வழங்க சிபாரிசு செய்யவே வந்திருக்கின்றேன் என்றும் கிராம மக்களிடம் கூறியிருக்கின்றார்.

அவரின் பேச்சை, கிராம மக்கள் பலர் இரண்டாயிரம், ஏழாயிரம் என்று பணம் வழங்கியுள்ளனர்.

இந்த நபரில் சந்தேகம் கொண்ட சில கிராம இளைஞர்களும் கிராம உத்தியோகஸ்தரும் மடக்கிப் பிடித்து விசாரித்தபோது போலியான அரச அலுவலர் என தெரிய வந்தது.

குறித்த சந்தேகநபரை மட்டக்களப்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் வைத்து, வவுணதீவு பொலிஸாரும் மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-ச)

## மக்கள் பிரச்சினைக்காக போராடும் நான் இனவாதியாகத் தெரிகிறேன்!

### மட்டு. அரச அதிபரிடம் விகாராதிபதி ஆக்ரோஷம்

யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கி அவர்களின் காயத்துக்கு மருந்திட்ட என்னை புலி பயங்கரவாதி எனக் கூறி எனக்கு எதிராக தேரர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்தார்.

அதே போல தற்போது என்னுடைய மக்களின் பிரச்சினைகளுக்காக போராடும் என்னை இனவாதி என பட்டிப்பளை பிரதேச செயலாளரும், மட்டக்களப்பு கிராம உத்தியோகத்தரும் மக்களிடம் பொய்க்கதைகளை வருகின்றனர்.

வெளி நாட்டில் உள்ளவர்கள் புலிக் கொடியை ஏந்தியவாறு என்னைக் கொலை செய்வேன் என இலட்சக்கணக்கான குறுந்தகவல்களை அனுப்புகின்றனர்.

எனது மக்களுக்காக நான் இறப்பதற்கும் தயாராக உள்ளேன். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அஞ்சியவன் நானல்ல என்றும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கிராம சேவகரின் ஊடாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஆறு சிங்கள குடும்பங்களுக்கு நீதியை பெற்றுத் தருமாறு வலியுறுத்திய மகஜர் ஒன்றை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கையளித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரச ஊழியர்களை அச்சுறுத்தியமை மற்றும் தனியார் காணிக்குள் அத்துமீறி பிரவேசித்தமை போன்ற விடயங்களுக்காக பல்வேறு தரப்பிடம் இருந்தும் கண்டனங்களை விகாராதிபதி எதிர்நோக்கி வருகிறார். இவ்வாறான நிலையில் அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்:-

நான் இனவாதியோ மதவாதியோ அல்ல. தமிழ் மக்களுக்கு எதிரானவனும் அல்ல. சிங்கள மக்களின் உரிமைகளுக்காகவே போராடுகிறேன்.

நான் இனவாதரீதியில் செயற்படுவதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன.

பாண் கூட வாங்க முடியாத இந்த அப்பாவி மக்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து அம்மக்களை காணியிலிருந்து வெளியேறுமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவர்களுக்கு எந்த விதமான உதவிகளும் இல்லாததால் நானே அவர்களுக்கு வீடு களை அமைத்துக் கொடுத்துள்ளேன். இவ்வாறு உதவி இன்றி இருப்பவர்களிடம் தற்போது இருக்கும் வீட்டையும் விட்டுவெளியேறுமாறு கூறினால் அவர்கள் எங்கு செல்ல முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தங்களை நான் அச்சுறுத்தவில்லை. மாறாக கோரிக்கையாகவே முன்வைக்கின்றேன். இப்பகுதியில் தமிழ், முஸ்லிம் அதிகாரிகளே அரச சேவையில் உள்ளனர்.சிங்கள அரச அதிகாரிகள் இல்லை என்பதால் எம்மக்களுக்கும் பாரபட்சம் இன்றி நீங்கள் உதவவேண்டும். இப் பிரச்சினைக்கு தீர்வுகிடைக்கும் வரை இந்த அப்பாவி மக்களுக்கு எதிராக எவரும் செயற்பட வேண்டாம்- என்றார். (இ-ச)




ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாநாடும் குருபூசையும் நேற்று ஆரம்பமாகின. நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாவலரின் உருவப்படங்கள் விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் தலைவர் அ.உமாமகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் நாவலர் படத்தை வழங்குகிறார். மேடையில் விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர். (ஐ-12)

## வடிகாலமைப்பு இல்லை; வீதியோரங்களில் வெள்ளம்!



மந்திகை, நவ.19

சிறந்த வடிகாலமைப்பு இன்மையால் மந்திகை சந்தைக்கு முன்பாக உள்ள வீதி ஓரங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது என்று பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மழை காரணமாகவும் வீதி மருங்கின் வடிகால்கள் சரியான முறையில் அமைக்கப்படாமையாலும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால்வீதியில்பயணம்செய்வோர்பெரிதும்சிரமம்அடைகின்றனா.

எனவே, வீதி ஓரத்தில் வடிகால்களை சரியான முறையில் சீரமைக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும் என்று மக்கள் கூறுகின்றனர். (ஐ-40)

# 500 பேர் தகவல் அதிகாரிகள் அரச நிறுவனங்களுக்கு நியமனம்

### தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்த

கொழும்பு, நவ.19

தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களுக்காக 500 தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின்மேலதிக செயலாளர் ஜி.கே.எஸ்.ரவீந்திர தெரிவிக்கையில்;-

தகவல் அதிகாரிகளை நியமிப்பது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று கூறினார்.

இதற்கு அமைவாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சு உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களுக்கும்தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சட்டத்திற்கு அமைய அரச நிறுவன மோன்றுக்காக தகவல் அதிகாரி ஒருவரும் மேன்முறையீட்டு விடயங்களுக்காக அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட உள்ள னர். நிறுவன தலைமை அதிகாரி மேன்முறையீட்டு அதிகாரியாக செயற்படுவார்.

இவ்வாறான நிறுவனத்தின் இரண்டாம் நிலை நிறைவேற்று அதிகாரி தகவல் அதிகாரியாக நியமிக்கப்படுவார்.30அமைச்சுக்கள் மற்றும் மத்திய வடக்கு, மற்றும் சப்ரக முவமாகாணங்களிலும் மாவட்ட செயலகங்கள் மூன்றுக்கும் தகவல் அதிகாரிகள் நியமிக்கும்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய நிறுவனங்களில் தகவல் அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாகஊடகத்துறை அமைச்சின் மேலக செயலாளர்மேலும்தெரிவித்தார்.

அனைத்து நியமனங்களையும் இம்மாத இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு அனைத்து அரசநிர்வாகங்களுக்கும்ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நியமிக்கப்படும் தகவல் அதிகாரிகளுக்காக பயிற்சிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. - என்றார். (ம)

## வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரானக் குற்றச்சாட்டுக்கள்:

# நீதியான விசாரணைகள் நடைபெறத் தவறினால் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவிடம் செல்வாராம்!

## சபை உறுப்பினர் லிங்கநாதன் உறுதிபடத் தெரிவிப்பு

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நீதியாக நடைபெறாவிட்டால் நிதி மோசடி மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு செல்வேன் - என்று வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்திருக்கின்றார்.


விசாரணைக்குழுதன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறும் பட்சத்தில் நிதி மோசடி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் வடமாகாண அமைச்சர்களின் ஊழல் குற்றச் சாட்டு தொடர்பான ஆவணங்களைச் சம்ர்ப்பிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

வட மாகாண அமைச்சர்கள் தொடர்பான ஊழல் குற்றச் சாட்டு தொடர்பான தன்னிடம் உள்ள ஆவணங்களை விசாரணைக் குழுவிடம் கையளித்தமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

வடமாகாண சபையின் விவசாய அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஊழல் மற்றும் முறைகேடு சம்பந்தமான பிரேரணை ஒன்று என்னால் 09.02.2016 ஆம் திகதி முன்மொழியப்பட்டு ஆளுங்கட்சி உறுப்பினரான கேசவன் சயந்தன் வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் 25.02.2016 ஆம் திகதி அன்று நடைபெற்ற சபை அமர்வின் போது முதலமைச்சரால் முன்னைய பிரேரணையை அதிகாரபூர்வ அறிக்கையில் (ஹன்சாட்) இருந்து நீக்குவதற்காக கொண்டு வரப்பட்டு அது தோற்கடிக்கப்பட்டது. இருந்தும் இறுதியில் முதலமைச்சர் ஆதாரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விசாரணை நடத்துவார் என ஏற்றுக்கொண்டார்.

இதன் பின்னர் சுமார் 6 மாதம் கழித்து மாகாணசபை உறுப்பினர் பரஞ்சோதியினால் ஒரு பிரேரணை முன்மொழியப்பட இருந்த வேளையில் முதலமைச்சர் தானாகவே இவ் விசாரணை குழுவை நியமித்து செயற்படுத்தப் போவதாக கூறியிருந்தார். இதன் பிரகாரம் சுமார் இரண்டு மாதங்கள் கழிந்தும் மொத்தமாக எட்டு மாதங்கள் இவ் விசாரணைக் குழு நடைபெறவோ, செயற்படவோ



இல்லை.

06.10.2016 ஆம் திகதிய அமர்வில் 03.112016 அன்று இவ் விசாரணைக் குழு ஓய்வு பெற்ற நீதிபதிகள் இரண்டு பேரும் ஓய்வு பெற்ற அரச அதிபர் ஒருவருமாக மொத்தம் மூன்று பேர் அடங்கிய குழு பிரதம செயலாளர் அலுவலகத்தில் இயங்கும் என பேரவை தலைவரால் அறிவிக்கப்பட்டது.

03.11.2016 அன்று விவசாய அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமான ஆவணங்களை முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவிடம் கையளிக்கச் சென்றபோது அங்கு விசாரணை அலுவலகமோ, விசாரணைக் குழு உறுப்பினர்களோ இல்லை என்பதை பிரதம செயலாளர் அலுவலகத்தினால் எனக்கு அறி விக்கப்பட்டது. இது தொடர்பாக ஊடகங்கள் என்னிடம் கேட்டபோது, நான் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் வெளி வந்தது யாவரும் அறிந்ததே.

07.11.2016இருந்து இந்த விசாரணைக் குழு பிரதம செயலாளர் அலுவலகத்தில் இயங்கும் என்றும், ஆவணங்களை பிரதி பிரதம செயலாளர் திருமதி கு.காஞ்சனா கையளிப்பு செய்யலாம் என்றும் பத்திரிகை வாயிலாக முதலமைச்சர் அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டது. இதற்கமைவாக எனது முறைப்பாட்டு கடிதம் மூன்று, இரண்டு வீடியோ பதிவுகள், பத்திரிகை பிரதிகள் இரண்டு மற்றும் நான்கு மேலதிகமான ஆவணங்கங்கள் என்பன 16.11.2016 ஆம் திகதி அன்று என்னால் கையளிக்கப்பட்டன.

எனினும் இதன் பிரதிகளை மொழிபெயர்ப்புக்காக தற்போது கையளித்துள்ளேன். இவ் விசாரணைக்குழு ஒரு நீதியான விசாரணையினை நடத்தி உண்மைகள் கண்டறியப்பட்ட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். இருந்தும் இவ் விசாரணைக் குழு தன்னுடைய கடமைகளை சரிவரச் செய்ய தவறும் பட்சத்தில் நிதி மோசடி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு ஆகியவற்றிடம் கையளிப்பதற்கும் நான் ஆயத்தமாக இருக்கின்றேன்.

எது, எப்படி இருப்பினும் எவ்வித இடையூறுகளும் இன்றியும் எவ்வித செல்வாக்குகளும் செலுத்தப்படாமல் இவ் விசாரணைகள் நடைபெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் இதுவரை அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர் பதவிகளிலிருந்து விசாரணைகள் பூரணமாக முடியும் வரை விலகியிருக்க தீர்மானித்துள்ளேன். இதற்கான கடிதத்தை பேரவைத் தலைவரிடம் நேரடியாக கையளித்துள்ளேன். - என்றார். (உ-100)

# வாழ்வாதார உதவி தொடர்பாக புதுக்குடியிருப்பில் கவனவீர்ப்பு



முல்லைத்தீவு,நவ.19

வாழ்வாதார உதவிகள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வில்லை எனத் தெரிவித்து புதுக்குடியிருப்பில் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள் சிலர் தமக்கு இதுவரை வாழ்வாதார உதவிகள் கிடைக்க வில்லை எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

நேற்றுக் காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள் வாழ்வாதாரங்கள் வழங்கப்படும் போது ஒரு சிலருக்கே தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. இதனால் தாம் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

குறிப்பாக வெளிநாட்டில் இருந்து வரும் நிதிகள் பகிர்ந்தளிக்கும் அமைப்புக்கள் பல தமது வசதிக்கு ஏற்றவாறு அவற்றைப் பகிர்ந்து வழங்குகின்றன.

இதனால் பாதிக்கப்படுகிறோம். இதுபோன்ற ஒரு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. லண்டன் சிவன்கோவில் அமைப்பால் கைவேலியில் இயங்கும் பெண்கள் அமைப்பினூடாக வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரும் கலந்து கொண்டு உதவிகள் வழங்கி இருந்தார். இதனுடைய பயனாளிகளும் உரிய முறையில் தெரிவு செய்யப்படவில்லை. எனவே எமக்கு உரிய நீதி தேவை என்று கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-81)

## மெனிக்பாம் மைதானத்துக்கு பாதுகாப்பு வேலி அமைப்பு



மெனிக்பாம், உதய சூரியன் விளையாட்டுக் கழகத்துக்கு அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் மைதான வேலி அமைப்பதற்கான உதவி வழங்கப்பட்டுள்ளது.

வெங்கலச்செட்டிகுளம் பிரிவுக்குட்பட்ட மெனிக்பாம், உதய சூரியன் விளையாட்டுக் கழகத்துக்கு வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமாகிய பத்மநாதன் சத்தியலிங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதியில் இருந்து மைதான வேலி அமைப்பதற்கான உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை கழகத்தின் தலைவர் தர்மசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் சம்பிரதாயபூர்வமாக விளையாட்டுக் கழகத்துக்கான உதவிப் பொருள்களைக் கையளித்தார். (ஐ-81)

## செக்கட்டிப்பிலவு வீதி சேதத்தால் அவலம்

வவுனியா,நவ.19

வவுனியா சிவபுரம் கிராமத்தின் செக்கட்டிப்பிலவு வீதி பெரும் சேதமடைந்த நிலையேல் – பயணிகள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

இவ் வீதியில் செப்பனிடும் பணிக்கு கிரவல் மண் பறிக்கப்பட்டு கடந்த இரண்டு கிழமைகளுக்கு மேலாக திருத்த வேலைகள் எதுவும் நடைபெறாமல் உள்ளன.


இந்த வீதியால் பயணம் செய்யும் அந்தக் கிராமத்து மக்கள் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் என பலரும் இவ் வீதியில் பயணத்தைத் தொடர முடியாமல் சிரமப்படுகின்றனர்.

தற்போது மழை பெய்து வரும் நிலையில், சேறும் சகதியுமாக அந்த வீதி காணப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிராம மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-12)

## வெங்கலச்செட்டிக் குளம் நூலகத்துக்கு புத்தகங்கள்



வெங்கலச் செட்டிகுளம் நூல் நிலையத்துக்கு வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதியில் இருந்து ஒரு தொகை புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையில் அதன் செயலாளர் விஜயதாஸ் தலைமையில் நடைபெற்ற புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், பிரதேசசபை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் இன்று நம்மிடையே வாசிப்பு பழக்கமானது மிகவும் அருகி வருகிறது. மேலத்தேய நாடுகளில் வாசிப்பு பழக்கம் அதிகளவில் இன்றும் ஊக்குவிக்கப்படுகிறது என்று தெரிவித்தார்.


அத்துடன் இளம் சமூகத்தினர் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் அதன் பொருட்டு நூல் நிலையங்களின் இயங்கு நிலையையும் பங்களிப்பையும் மேம்படுத்த வேண்டும் என்றும் வலியறுத்தினார். (ஐ-81)



முல்லைத்தீவு விநாயகபுரம் அ.த.க.பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கௌரவங்களை வழங்கினார். (ஐ-81)

# முன்னாள் போராளிகளின் சேமநலனுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுங்கள்!

**வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கடந்த வியாழனன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரையின் சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.**



**வரவு- செலவுத் திட்ட உரையில் டக்ளஸ் வலியுறுத்து**

வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் முன்னேற்றகரமான நிலைப்பாடே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் காணப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் இதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்காக ஐநூறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகளவிலான மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமையாலும், அவர்களது வீடுகள் பல அழிந்தும், சேதமடைந்தும் இருப்பதாலும், அவர்களுக்கான வீடுகளின்மை பிரச்சினை இன்னும் தீர்ந்ததாக இல்லை.

ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டிருந்த 65 ஆயிரம் பொருத்து வீடுகளை எமது மக்களில் பெரும்பாலானவர்கள் விரும்புகின்ற நிலையிலும், ஒரு சிலரது அரசியல் சுயலாபங்கள் காரணமாக அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், எமது மக் களின் விருப்பங்களை அறிந்து, அந்தத் திட்டத்தை தற்காலிகத் திட்டமாகச் செயற்படுத்த அரசு முன்வரவேண்டும் என நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளை அதிகரிக்கும் நிலை யில், முன்னுரிமை அடிப்படையில் - யுத்தம் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டு இன்று தங்களது வாழ்வாதாரங்களை முழுமையாக இழந்துள்ள வடக்கு - கிழக்கு மக்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு அதி விசேட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

## முன்னாள் போராளிகளுக்கு விசேட திட்டம்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எதுவிதமான வாழ்வாதார வசதிகளும் இன்றி தற்போது பல காலமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை அவதானத்தில் கொண்ட விசேட திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மிகவும் வலியுறுத்தி இச் சபையில் முன்வைக்கின்றேன்.

அதே நேரம், இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களையும், புதிய தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவிக்கக் கூடிய பல திட்டங்கள் காணப்படுகின்றன. இந்தத் திட்டங்களில் இயலுமானவரை மேற்படி முன்னாள் போராளிகளையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும்எனக்கேட்டுக் கொள்கின்றேன்.

யுத்தம் காரணமாக அவயவங்களை இழந்து மாற்றுத்திறனாளிகளாக ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையும், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின்எண்ணிக்கையும்வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அதிகமாக உள்ளது.

ஆகவே, இவர்களுக்கென விசேட திட்டங்கள்முன்னெடுக்கப்படவேண்டும். தற்போது நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற அரச நிவாரணத் திட்டங்களால் இந்த மக்களது பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க முடியாது என்பதையும் நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கென 180 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், நாடளாவிய ரீதியில் இச் செயற்பாடுகள் இதுவரை எத்தகைய முன்னேற்றத்தைக் கண்டுள்ளன என்பதை அளவிட முடியாமல் உள்ளது.

## விரிசல் அதிகரிப்பு

நாங்கள் தேசிய நீரோட்டத்துக்கு வந்தமை முதல் இன்று வரையில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்துக்காகவும், தேசிய நல்லிணக்கத்தை வலுமிக்கதாகக் கட்டியெழுப்புவதற்காகவும் அயராது உழைத்து வருகின்றோம்.

எம்மால் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடிந்தளவுக்குத் தற்போதைய நல்லிணக்கச் செயற்பாடுகள் வெற்றியளித்துள்ளன எனத் தெரிய வரவில்லை என்பதை நான் மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தற்போதைய நாட்டு நிலைவரங்களைப் பார்க்கும் போது, தேசிய நல்லிணக்கத்துக்குப் பதிலாக இனங்களுக்கிடையே விரிசல் நிலையே அதிகரித்து வருகின்றமையை உணரக் கூடியதாக இருக் கிறது. இதற்கு உதாரணமாக அண்மையில் மட்டக்களப்பில் நடந்த சம்பவத்தை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனது அரச கடமையை ஆற்ற முனைந்த ஒரு தமிழ் கிராம சேவையாளர் மீது மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் இனவாத வார்த்தைகளால் மிகவும் அநாகரிகமான முறையில் திட்டித் தீர்த்திருக்கிறார்.

பௌத்த மதத்தின் உண்மையான போதனைகளுக்கு மாறாக - அதன் புனிதத் தன்மையைக் களங்கப்படுத்தும் வகையில் - மட்டுமன்றி, தேசிய இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாகவுமே அவரது செயற்பாடு அமைந்திருக்கிறது.

இன நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு எதிரான செயல்கள் எந்தத் தரப்பில் இருந்து வந்தாலும் அதை நாம் ஒரு போதும் ஏற்பவர்கள் அல்லர்.

## நல்லிணக்கம் என்பது சரணாகதி அரசியல் அல்ல

நாம் விரும்பும் இன நல்லிணக்கம் என்பது சரணாகதி அரசியலும் அல்ல. ஓர் இனத்தின் மீது இன்னோர் இனத்தவர்கள் சார்பில் யாரும் மேலாண்மை செலுத்துவதும் அல்ல.

ஆகவே, இதுபோன்ற நிலை மைகளை இந்த அரசு மாற்றியமைக்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில், அங்குள்ள பெரும்பாலான மக்களது நிலைமை மிகவும்மோசமானநிலையில்உள்ளது. அதாவது, மரத்தில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த நிலையே அங்கு உருவாகியுள்ளது.

## திரும்பும் நிதி; யார் காரணம்?

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்களுக்குத் தேவைகளின் நிமித்தம் அதிகூடிய நிதியை ஒதுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை ஆகும்.

ஆனாலும், கடந்த காலங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்றவகையில்குறிப்பாக, வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி திறைசேரிக்குத் திரும்பி வந்துள்ளதாக அறிய முடிகின்றது.

கடந்த ஆட்சியின் போது மத்திய அரசே வடமாகாண சபையின் செயற்பாடுகளுக்குத் தடையாக உள்ளது என்று குற்றம் கூறினார்கள்.

ஆனாலும், மலர்ந்திருக்கும் புதிய ஆட்சியிலும் தொடர்ந்தும் வடமாகாண சபைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி அந்த மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாமலேயேதிறைசேரிக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறது.

இதன் உண்மை யாதெனக் கண்டறியப்பட வேண்டும். இது யார் தவறு? வடமாகாண சபையின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளா? அன்றி இன்று மலர்ந்திருக்கும் மத்திய அரசின் தடைகளா?

இது குறித்து இந்த சபையில் ஒரு விவாதம் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

எது உண்மை? எது பொய்? என்பது எமக்குத் தெரியும். ஆனாலும், எமது மக்களுக்கும் அந்த உண்மை தெரிந்தாக வேண்டும்.

## தமிழ் அரசியல் கட்சிகளின் சுயலாப நோக்கம்

தமிழ் பேசும் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார மீட்சிக்கு அரசு வழி திறந்து விட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

ஆனாலும், அதுநிறைவேறக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பதே சுயலாப தமிழ் அரசியல் கட்சிகளின் நோக்காக இருந்து வருகின்றது.

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையைத் தீராத பிரச்சினை ஆக்கி, அதில் தங்களது பதவி நாற்காலி சுகங்களை அனுபவிப்பதே போலித் தமிழ்த் தேசியவாதிகளின் விருப்பமாகும்.

அன்று அடுத்த பொங்கலுக்குத் தமிழீழம் என்றார்கள். அடுத்த மே தினம் சுதந்திரத் தமி ழீழத்தில் என்றார்கள். இன்று 2016 நடுப்பகுதியில் தீர்வு கிடைக்கும் என்றார்கள். பின்பு 2016 கடைசியில் என்றார்கள்.

பின்பு அது கணிப்பு என்றார்கள். தற்போது 2017 தீபாவளிக்கு என்கிறார்கள். அதாவது 'இன்று கடன் இல்லை' என்று கடைகளுக்கு முன்னால் அறிவிப்புப் பலகை வைப்பதுபோல.

இந்தப் புதிய அரசு பதவிக்கு வந்து அதனது 100 நாள்கள் வேலைத்திட்டத்தினுள் தீர்ப்பதற்கான முயற்சிகளை, போலித் தமிழ்த்தேசியம் பேசி - மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கி- வாக்குகளை அபகரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்திருக்க வேண்டும்.

எந்தஅரசுஆட்சிக்குவந்தாலும்முதல் ஆறுமாதம் அல்லது குறைந்தது ஒரு வருடத்துக்குள் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். அல்லது அது 'ஆறிய கஞ்சி பழம் கஞ்சி' ஆகிவிடும். அரசுக்குப் புதிய பிரச்சினைகள் வந்து அரசியல் இலக்கு திசை திருப்பப்பட்டு விடும்.

## புலம்பெயர் தமிழர் திரும்புவது எங்ஙனம்

அடுத்து, புலம்பெயர்ந்துவாழும்தமிழ் மக்களைத் திரும்பி அழைக்க வேண்டும் என்ற குரல்கள் ஆங்காங்கே இன்று எழுகின்றன. ஆனாலும், ஒரு விடயத்தைச் சகலரும் சிந்திக்க வேண்டும்.

யுத்தம் மட்டுமே இங்கு முடிவுக்கு வந்திருக்கின்றதே ஒளிய, யுத்தத்தால் உருவான வடுக்கள் இன்னமும் ஆறவில்லை.

உள் நாட்டில் இடம்பெயர்ந்த மக்களே இன்னமும் முழுமையாகத் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பவில்லை. இது வரை மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதார உரிமைகள் கூடத் திருப்திகரமாக அமையவில்லை. வீழ்ச்சியடைத்த தொழில் துறைகளும் பொருளாதார வளங்களும் போதியளவு தூக்கி நிறுத்தப்படவில்லை.

எமது மக்கள் தமது சொந்தக் காலில் நிமிர்ந்து நிற்கும் சுய பொருளாதாரப் பொறிமுறைகள் இன்னமும் முழுமை பெறவில்லை. நிரந்தர அரசியல் தீர்வு இன்னமும் காணப்பட வில்லை.

இவைகள் அனைத்தும் உறுதிப் படுத்தபட்ட பின்னரே புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களைத் திரும்பி அழைப்பது குறித்து சிந்திக்க முடியும். இது குறித்து நாம் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் மற்றும் சம்பந்தப்பட்ட சர்வதேச சமூகத்திடமும் பிரத்தியேகமாக சந்தித்து வலியுறுத்த உள்ளோம்.- என்றார்.

பொன்.வேணு கிருஷ்ணா

## ட்ரம்பின் தலைமை மூலோபாய கொள்கை வழிவமைப்பாளர் யார்?

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்பின் அடுத்த செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் உலக நாடுகள் ஆவலாகக் காத்திருக்கின்றன.

இந்நிலையில் அமெரிக்காவின் சிறுபான்மை சமூகங்களுக்கும் சர்வதேச ராஜதந்திரிகளுக்கும் அதிர்ச்சியளிக்கும் வகையிலான முடிவொன்றை ட்ரம்ப் எடுத்துள்ளார்.

ஸ்டீவனுக்கு அதிரடி தேவை. எதையும் விட்டுக்கொடுக்க மாட்டார், பலவீனத்தை வெளியில் காட்ட மாட்டார். தனது வெள்ளை மாளிகை அதிகாரத்தை எதிரிகளைப் பழி வாங்கவே அவர் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்கிறார்கள்.

தெரிவாகியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் அவர்களின் குரு, ஆலோசகர், தத்துவ ஆசிரியர், வழிகாட்டி, மூல உபாய கொள்கை வகுப்பாளர் எல்லாம் Stephen Kevin Bannon தான். தனது பொறுப்பை 2017 ஜனவரி 20இல், ட்ரம்ப் ஜனாதிபதியாகும் அதே தினத்தில் ஏற்கிறார். அமெரிக்காவின் வேர்ஜீனியா மாநிலத்தில் பிறந்தவர். 63 வயது; குடியரசுக் கட்சிக்காரன்; தொழிநுட்பத்துறை, தேசிய பாதுகாப்புத் துறை, வர்த்தக நிதி முகாமைத்துவத்துறை ஆகியவற்றில் பட்டப்படிப்பு;




ட்ரம்பின் தலைமை மூலோபாய கொள்கை வகுப்பாளர் ஸ்டீவன் கெவின் பன்னோன் ட்ரம்புடன்...

திலும் பாரிய மாற்றங்களுக்கு வழிவகுக்கும்.

தலைமை மூலோபாய கொள்கை வடிவமைப்பாளரான Stephen Kevin Bannon அமெரிக்காவின் உள்நாட்டுச் சூழலை எவ்வாறு கையாளுவார்?

அமெரிக்காவின் சட்டவாக்கசபை (legislative) அமெரிக்க காங்கிரஸ் ஆகும். அது மேற்சபையான செனட், கீழ்ச் சபையான பிரதிநிதிகள் சபை எனஇரு பிரிவுகளைக் கொண்டது(The United States Congress is the bicameral legislature of the federal government of the United States consisting of two chambers: the Senate and the House of Representatives.) இவ்விரு சபைகளிலும் குடியரசுக்கட்சியின் அங்கத்துவம் ஜனநாயகக்கட்சியைக் காட்டிலும் அதிகமாகவுள்ளது. அதேவேளை நிறைவேற்று அதிகாரத்துறைக்கு (Executive Branch) தெரிவான புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் குடியரசுக்கட்சிக் கட்சிக்காரர். அத்துடன் அமெரிக்க நீதிபரிபாலனத்துறையான நீதிமன்ற முறைமைகளிலும் (Judiciary) முக்கிய சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதிலும் ட்ரம்ப் உறுதியாகவுள்ளார். ஆகவே அமெரிக்க ஐக்கிய நாட்டினது The United States of America(USA) அரசின் அங்கமாகிய அரசாங்கத்தின் இரண்டு பிரதான தாங்கு தூண்களாகிய சட்ட ஆக்கத்துறை, நிறைவேற்று நிர்வாகத்துறை ஆகியன குடியரசுக்கட்சியின் பலமான பிடிக்குள் வந்துள்ளன. நீதிபரிபாலனத்துறையில் ட்ரம்ப் மேற்கொள்ளவுள்ள சீர்திருத்தங்கள் அவரது கொள்கைகளை நடை முறைப்படுத்துவதற்கு ஏற்றவகையில்தான் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால்



அமெரிக்காவின் தேசிய புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளர் James Clapper.

Kevin Bannon மேலே விவரிக்கப்பட்ட நிலைமைகளை உருவாக்கி, ஐக்கிய அமெரிக்கநாட்டை வெள்ளைக்காரர்களை மட்டும் மையப்படுத்திய நாடாக்கி, தீவிர வலதுசாரி மதவாத முதலாளித்துவத்தை நிறுவி, முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மை இனத்தவர்களை அடக்கியொடுக்கி, அமெரிக்கா மீது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தி, அவர்களை வெளியேற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டத்தைக் கொண்டுள்ளார்.

கொழும்பில் நிலை கொண்டுள்ள முன்னாள் மூத்த ராஜதந்திரியொருவர், வெள்ளையர்கள் பயன்படுத்தும் மலசல கூடங்களை கறுப்பர்கள் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு மீண்டும் அமெரிக்கா இழுத்துச்செல்லப்படுகிறது. மார்ட்டின் லூதர் கிங் (Martin Luther King Jr.) 1950 களின் நடுப்பகுதியிலிருந்து 1968 இல் அவர் படுகொலை செய்யப்படும் வரை சிவில் உரிமைகளுக்கான போராட்ட அமைப்பை (The Civil Rights Movement) உருவாக்கி போராடினார். அவ்வாறான நிலைமை மீண்டும் அமெரிக்காவில் எழலாம் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு பயணிக்கவுள்ள அமெரிக்கா ஏனைய நாடுகளின் சிறுபான்மையின மக்களின் உரிமைகளுக்காக எவ்வாறு குரல் கொடுக்கும் ?

Stephen Kevin Bannon தான் அமெரிக்காவின் முக்கிய அமைச்சுப் பதவிகளை யார் யாருக்குக் கொடுக்கலாம் என்பதைத் தீர்மானிக்கப் போகிறார். மேலும் தற்பொழுது அமெரிக்காவின் தேசிய புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளர் James Clapper இராஜினாமாச் செய்துள்ள நிலையில் அடுத்த புதிய பணிப்பாளர் யார் எனவும் Stephen Kevin Bannon தான் தீர்மானிக்கப் போகிறார்.

சர்வதேசக் கொள்கைகளில் அதிர்ச்சியூட்டும் மாற்றமாக ட்ரம்பின் தலைமை மூலோபாய கொள்கை வடிவமைப்பாளரான Stephen Kevin Bannon, தனது ஆள்கள் மூலமாக ரஷ்யாவின் பழுத்த தொழில் முறையான புலனாய்வு மேதையும் ரஷ்ய ஜனாதிபதியுமான விளாடிமிர் புட்டினுடன் நேரடித்தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, ரஷ்ய உதவியுடன் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரியை தோற்கடிக்கும் மூல உபாயத்தை வகுத்தார்

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

08

ஜனாதிபதியின் பிரதான ஆலோசகராக சர்ச்சைகளுக்குப் பெயர் போன வலதுசாரி கொள்கைகள் கொண்ட ஸ்டீவன் பன்னோன் (Steve Bannon) நியமிக்கப்படவுள்ளார்.

Stephen Bannon, தீவிர வலதுசாரி ஊடகமான Breitbart News இன் தலைமை நிர்வாக அதிகாரி. அவரையே டொனால்ட் ட்ரம்ப் தனது தலைமை மூலோபாய கொள்கை வடிவமைப்பாளராக நியமித்துள்ளார். தலைமை நிர்வாக அதிகாரி, உலகப் பொருளாதாரத்திலும் அறநெறி விடயங் களிலும் அமெரிக்கா நெருக்கடியின் மத்தியில் இருப்பதாக நம்புகிறார்.

ஸ்டீவன் பன்னோன், யூதர்கள், குடியேறிகள் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கொள்கையைக் கொண்டவர். ட்ரம்ப்பை போலவே, இவரது கொள்கைகளும் இருப்பதால் அமெரிக்க சிறுபான்மை மக்கள் அச்சத்திலுள்ளனர்.

ஸ்டீவன் பன்னோன் தேர்தலின் போது ட்ரம்ப்பின் பிரசாரத்தை வடிவமைத்து தரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அமெரிக்க ஜனாதிபதி ஆலோசகர் பதவியில் இதற்கு முன்பு இருந்த கர்ல் ரோவ் மற்றும் வலெரி ஜர்ரெட் ஆகியோர் சர்ச்சையை சம்பாதித்தவர்கள். ஆனால் அவர்களுக்கு நீண்ட கால கட்சி நடைமுறை, அரசியல் அனுபவம் இருந்தது.

ஆனால், ஸ்டீவன் பன்னோன் ஒரு பத்திரிகைக்காரர். வெள்ளை ஆதிக்க சிந்தனை கொண்ட ஸ்டீவன், ஜனாதிபதி ஆலோசகராவது அமெரிக்காவை எங்கு கொண்டுபோய் நிறுத்தும் எனத் தெரியாது என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ஒபாமா ஆட்சியில்தான் அதிக கறுப்பினத்தவர்கள் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். நிலைமை இப்படி மோசமாக இருக்கும்போது ஸ்டீவன் வருகை இதை மேலும் ஆபத்துக்குள்ளாக்கலாம்.



அமெரிக்காவின் தேசிய புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளர் James Clapper ஒபாமாவுடன்...

அமெரிக்க கடற்படையில்1976-1983 காலப்பகுதியில் முக்கிய பதவிகளில் 7 வருட தீவிரசேவை; இவையெல்லாவற்றுக்கும் அப்பால் ஒரு பெரிய இலத்திரனியல் ஊடக ஜாம்பவான்; காலத்துக்குக் காலம் பாரிய பன்னாட்டு இலத்திரனியல் ஊடக நிறுவனங்களை வாங்குபவராகவும் உருவாக்கி கொண்டு நடத்துபவராகவும் இருக்கிறார்; அமெரிக்க அரசியல் வரலாற்றுச் சர்ச்சைகளைக் கொதிக்கவைக்கும் ஒளி ஆவணப்படைப்புக்களாகத் தயாரித்துத் திரையிட்டிருக்கிறார்.

இத்தகைய ஆழ, நீள, அகலங்களைக் கொண்ட Stephen Kevin Bannon தான் ட்ரம்பின் தேர்தல் கால யுக்திகளையும் வியூகங்களையும் துல்லியமாக வகுத்துக் கொடுத்து அவற்றை வழிநடத்தி அமுலாக்குவதையும் முழுமையாகக் கவனித்தவர்.

டொனால்ட் ட்ரம்ப் தனது தலைமை மூலோபாய கொள்கை வடிவமைப்பாளராக இவரை நியமித்துள்ளமை அமெரிக்காவிற்குள்ளும் சர்வதேசத்

நல்லாட்சியுடன் கூடிய ஜனநாயகத்தின் (Democracy with Good Governance) மூலவேர்களாகிய வலுவேறாக்கப் பொறிமுறையும் (separation of powers) கண்காணித்துக் கட்டுப்படுத்திச் சமநிலைப்படுத்தும் பொறிமுறையும் (checks and balances) அமெரிக்காவின் தீவிர வலதுசாரி வெள்ளையினச் சமுதாயத்துக்கு சார்பாகவும் அமெரிக்க முஸ்லீம்கள், கறுப்பின மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையின, மத மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதேவேளை ட்ரம்பின் தீவிர வலதுசாரிக் கொள்கைகளை விமர்சிக்கின்ற, எதிர்க்கின்ற, ஆதரிக்காத வெள்ளையினத்தவர்களும் அமெரிக்க சிறுபான்மையின மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் அனைவரும் ட்ரம்பின் நிர்வாகத்தினால் அடக்கியொடுக்கப்படுவர் அல்லது வெவ்வேறான வழிகளில் தோற்கடிக்கப்படுவர்.

ட்ரம்பின் தலைமை மூலோபாய கொள்கை வடிவமைப்பாளரான Stephen



எனவும் அதன் தொடர்ச்சியாக ரஷ்ய அரசாங்கத்துடன் ட்ரம்ப் நிர்வாகம் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ளவும், இணக்க உடன்பாடுகளை எட்டவும் கடும் முயற்சி எடுத்து வருகிறார் எனவும் கூறப்படுகின்றது. உக்ரெயின்– கிரைமியா நெருக்கடி, கிழக்கு ஐரோப் பியாவில் நேட்டோ நெருக்கடி, சிரியாவின் ஆசாட் அரசாங்கத்திற்கு ரஷ்யா வழங்கிவரும் இராணுவ உதவி,ஐ.எஸ்.ஐ.எஸ் பிடித்துவைத்துள்ள நிலங்களை மீட்டல் முதலிய பல விவகாரங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் அமெரிக்க–ரஷ்ய பேச்சுவார்த்தைகளுக்கூடாக தீர்வைப்பெறவும் பாடுபடுவார் எனவும் அறியமுடிகிறது. இத்தகைய பின்புலத்தில்தான் தேசிய புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளர் James Clapper இராஜினாமாச் செய்துள்ளார்.

(கேள்வி தொடரும்...)



05

# உலக வரலாறும் மனித விடுதலையும்



காள் மாக்ஸின் எழுத்துக்களில் ஹேகலின் இயங்கியல் விதிகள் பொருளுலகின் எதார்த்தக் களத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. மெய்யுலகின் இயங்கு விதிகளாக அவை நிறுவப்படுகின்றன.

காள் மாக்ஸ் ஒரு பொருளியவாதி. பொருளுலகத்தையே மெய்யுலகமாகக் கண்டவர். பொருளுலகத்துக்கே முதன்மை கொடுத்தவர். பொருளுலகத்திலிருந்தே மனவுலகம் தோற்றப்பாடு கொள்கிறது என்ற கருத்தைக் கொண்டவர். அவரது உலகப் பார்வை ஹேகலின் ஆன்மீகக் கருத்துலகிற்கு நேர்மாறானது.

ஹேகலின் தரிசனத்தில், வரலாறு என்பது ஒரு தெய்வீகச் சக்தி. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி. மனித உலகத்துக்கு அந்நியமான சக்தி. மனிதனுக்குப் புறம்பாக நின்று, ஆனால், அதே சமயம் - மனிதனுக்குப் புலனாகாத ஒரு புனித பயணத்தில், பரிபூரணத்துவத்தை நோக்கிய- முழு மனித விடுதலையை நோக்கிய- பரிணாமப் பயணத்தில், மனிதனை வழி நடத்திச் செல்லும் ஒரு சக்தி. இது பிரம்மமாக பிரபஞ்சப் பேரியக்கமாக, பிரபஞ்ச மனமாக எங்கும் எதிலும் சர்வவியாபகம் கொண்டு எல்லாவற்றையும் இயக்குகிறது. இது ஓர் இயங்கு சக்தி; சிருஷ்டி சக்தி. இந்தத் தெய்வீக சக்தி இயங்கியல் சக்கரத்தில் சுழல்கிறது. இயங்கியல் விதிகளுக்கு அமைய இயங்குகிறது. இப்படியாக, ஹேகலின் தத்துவார்த்த எழுத்துக்கள் இயக்கத்தின் மூல விதிகளை பிரம்ம சூத்திரமாக மாற்றி, அதன் அடிப்படையில் மனித வாழ்விற்கும் வரலாற்றுக்கும் விளக்கங்கள் கொடுக்கின்றன.

காள் மாக்ஸைப் பொறுத்தவரை, மனிதனின் பொருளிய வாழ்வே எல்லாவற்றுக்கும் மூலமானது. மனித மனமும், மனித உறவுகளும், மனித வாழ்வும், மனித வரலாறும் - எல்லாமே மனிதனின் பொருளிய வாழ்விலிருந்து பிரவாகமெடுக்கின்றன. இந்தப் பொருளிய வாழ்வின் மூல இயக்கமாகவே இயங்கியலை நிறுவுகிறார் மாக்ஸ்.

இந்தப் பொருளிய வாழ்வு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் நிர்ணயிக்கப்படுவதல்ல. மனிதனே பொருளுலகத்தைப் படைக்கிறான். மனித செயற்பாட்டின் மூலமே பொருளுற்பத்தி நிகழ்கிறது. இந்தப் பொருளுற்பத்தியில் நிகழும் ஒட்டுமொத்தமான உறவுகளின் கூட்டமைப்பாக பொருண்மியக் கட்டமைப்பு உருவாக்கம் பெறுகிறது. அதுவே, சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது. பொருண்மிய வளர்ச்சிப் போக்கில், பொருள் உற்பத்தி வடிவங்களில், தோன்றும் மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களை நிகழ்த்துகின்றன. இந்த சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக வரலாறு இயங்குகிறது. பொருண்மிய உறவுகளில் எழும் முரண்பாடும், அந்த முரண்பாட்டைக் களைந்துவிட மனிதர்கள் நிகழ்த்தும் போராட்டமும், அந்தப் போராட்டத்தால் நிகழும் சமூக மாற்றமுமாக வரலாறு நகர்கிறது. எனவே வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்தும் இயங்குசக்தி. இது பொருளுற்பத்திக் களத்திலிருந்து எழுவதால் அதனைப் பொருளிய வரலாறு அல்லது வரலாற்றுப் பொருளியம் (Historical materialism) என்கிறார் காள் மாக்ஸ். இந்தப் பொருளிய வரலாற்றை நகர்த்திச் செல்லும் இயங்கு விதிகளாக இயங்கியல் விதிகள் இயங்குகின்றன.

இயங்கியல் பற்றி விளக்கமான ஆய்வுரைகள் எதையும் காள் மாக்ஸ் எழுதிவிடவில்லை. ஆனால், அவரது தத்துவார்த்த எழுத்துக்களிலும், சமூக, பொருண்மிய ஆய்வுகளிலும் இயங்கியல் கருத்தாக்கங்கள் செறிந்து கிடக்கின்றன. இயங்கியலை ஒரு விளக்கக் கோட்பாடாக - ஓர் ஆய்வுக் கருவியாகக் கையாண்டு சமூக மெய்யுண்மைகளை அவர் புட்டுக் காட்டினார். இயங்கியல் ஆய்வு முறைமையின் (Dialectical methodology) ஒரு தலை சிறந்த உதாரணமாக அவர் எழுதிய 'மூலதனம்' விளங்குகிறது.

காள் மாக்ஸ், மனித சமூகத்தை ஒரு முரண்பாட்டுக் களமாகக் கண்டார். அவரது சமூக ஆய்வுகளில் இயங்கியலின் மூல விதியான முரணியம் முக்கிய இடத்தைப்பெறுகிறது.

சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் அல்ல. எல்லா மனிதர்களும் ஒன்று சேர்ந்தது. ஒத்திசைவாக,ஒன்றித்திருக்கும் ஒரு சுவர்க்க பூமியும் அல்ல. சமூகம் என்பது முரண்பாடுகள் நிறைந்த ஓர் உலகம். வர்க்கம் என்றும், சாதி என்றும், மதம் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், ஆளுபவன் என்றும், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன் என்றும், ஒடுக்கப்படுபவன் என்றும், சுரண்டுபவன் என்றும், சுரண்டப்படுபவன் என்றும், ஆண் என்றும், பெண் என்றும் மனித உறவுகளில், சமூகப் பிரிவுகளில் எங்கும், எல்லாவற்றிலும் முரண்பாடு தலைதூக்குகிறது. சமூகமானது முரண்பாடுகள் நிறைந்த ஒரு போராட்டக் களம். கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும் நிறைந்த மனித உலகம். இந்த முரண்பாடுகளே சமூகத்தின் அசைவியக்கத்திற்குக் காரணிகளாக இருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் இயல்புகளை இனங்கண்டு கொள்வதன் மூலமே சமூக அசைவியக்கத்தின் தன்மைகளைப் புரிந்துகொள்ளலாம். சமூக அசைவியக்கமாகக் கட்டவிழும் சமூக வ்ரலாற்றின் போக்கினையும் அறிந்து கொள்ளலாம்.

> சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் அல்ல. எல்லா மனிதர்களும் ஒன்று சேர்ந்தது. ஒத்திசைவாக,ஒன்றித்திருக்கும் ஒரு சுவர்க்க பூமியும் அல்ல. சமூகம் என்பது முரண்பாடுகள் நிறைந்த ஓர் உலகம். வர்க்கம் என்றும், சாதி என்றும், மதம் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், ஆளுபவன் என்றும், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன் என்றும், ஒடுக்கப்படுபவன் என்றும், சுரண்டுபவன் என்றும், சுரண்டப்படுபவன் என்றும், ஆண் என்றும், பெண் என்றும் மனித உறவுகளில், சமூகப் பிரிவுகளில் எங்கும், எல்லாவற்றிலும் முரண்பாடு தலைதூக்குகிறது. சமூகமானது முரண்பாடுகள் நிறைந்த ஒரு போராட்டக் களம். கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும் நிறைந்த மனித உலகம். இந்த முரண்பாடுகளே சமூகத்தின் அசைவியக்கத்திற்குக் காரணிகளாக இருக்கின்றன.

மனிதர்களின் சமூக வாழ்வைப் பொறுத்தவரை பொருளாதார வாழ்வே முக்கியமானது. பொருளுற்பத்தியே மனித வாழ்வுக்கு ஆதாரமானது. மனித தேவைகளை நிறைவு செய்வதும் அதுவே. இதனால், சமூகக் கட்டமைப்பில் பொருண்மிய அமைப்பிற்கே பிரதான இடத்தைக் கொடுக்கிறார் காள் மாக்ஸ். பொருண்மிய அமைப்பே பொருளுற்பத்தியின் மையம். அதுவே சமூகத்தின் திண்ணியமான அடித்தளம். அந்த அடித்தளத்தின் மேற்றளமாகவே மற்றெல்லாம் இயங்குகின்றன. பொருளிய வாழ்வே மனவுலகத்தை நிர்ணயிக்கிறது. பொருளிய புறநிலைகளின் வெளிப்பாடாகவே கருத்துலகமும் தோற்றப்பாடு கொள்கிறது.

பொருளுற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில், ஒரு காலகட்டத்தில், உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுகிறது. அந்த முரண்பாடு முற்றி வர்க்கப் போராட்டம் தீவிரம் பெறுகிறது. சமூகப் புரட்சிக்கான புறநிலை தோன்றுகிறது. இறுதியில், சமூகப் புரட்சி வெடிக்கிறது. இந்தச் சமூகப் புரட்சியால் பொருண்மிய கட்டுமானத்தில் மாற்றம் நிகழ்கிறது; உற்பத்தி உறவுகளில் மாற்றம் நிகழ்கிறது; சமூக வடிவத்தில் மாற்றம் நிகழ்கிறது. இதனால் புதிய சமுதாயம் பிறக்கிறது. இந்தப் புரட்சிகரமான சமூக மாற்றம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாக இடம்பெறுகிறது. இந்த வரலாற்று நிகழ்வு சமூகத்தை ஒரு புதிய படிநிலை வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.


இப்படியாகக் கடந்த காலங்களில் சமூக மாற்றங்கள் நிகழ்ந்து புதிய, சமூக வடிவங்கள் தோன்றி, பொருளாதாரக் கட்டமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டதாகக் கூறுகிறார் காள் மாக்ஸ்.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# தோட்ட நிர்வாகம் ஒப்பந்தத்தை மீறினால் சட்ட நடவடிக்கை

### காங்கிரஸ் பொதுச் செயலாளர் தொண்டமான் சூளுரை



ஹற்றன், நவ.19

தோட்டத் தொழிலாளர்களுக்கான கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக் கப்பட்டவையை மதித்து நடக்காத தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராக தொழிற்சங்க மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் சூளுரைத்துள்ளார்.

இ.தொ.கா வின் ஏற்பாட்டில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத் திடப்பட்ட சட்ட விதிகளை மீறி தொழிலாளர்களை அடக்கு முறைக்குள் கொண்டு வரும் தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராக அழுத்தம் கொடுக்கும் வகையில் ஹற்றனில் நேற்று முன்தினம் மக்கள் பேரணியுடன் போராட்டம் மற்றும் ஒப்பந்தம் தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்வு ஆகியன இடம்பெற்றன.

இதன்போது ஹற்றன் டீ.கே. டபிள்யூ கலாசார மண்டபத்தில் நடைபெற்ற ஒப்பந்தம் தொடர்பிலான தெளிவூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு;


"தொழிலாளர்களின் நலன் கருதி கூட்டு ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுள்ளது. இதில் 500 ரூபா அடிப்படைச் சம்பளம் அடங்கலாக ஏனைய கொடுப்பனவுகளுடன் 730 ரூபா கைச்சாத் திடப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என 75 ரூபா உள்ளடக்கப்பட்டு 850 ரூபா சம்பளமாகக் கிடைக்க கையொப்பம் இடப்பட்டுள்ளது. தொழிலாளி ஒருவர் மேலதிகமாக 10 கிலோ தேயிலையைப் பறிக்குமிடத்து மேலதிக கிலோவுக்கு வழங்கப்படும் 25 ரூபா தொகையின் ஊடாக 1000 ரூபா சம்பளம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இந்த நிலையில், செய்து கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் சட்ட விதிகள் மற்றும் ஒப்பந்த விதிகளை மீறி தொழிலாளர்களிடம் நாளொன்றுக்கு 18 கிலோ தேயிலை வேண்டும் என்று நிர்வாகங்கள் தொழிலாளர்களை அடக்குமுறைக்குள் கொண்டு வருகின்றன. ஆனால் 18 கிலோ தேயிலை வேண்டும் என்பது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆகையால் ஒப்பந்த விதிகளை மீறும் தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராக தொழிற் சங்கம் மற்றும் சட்ட நடவடிக்கைகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்காலத்தில் மேற் கொள்ளும்.- என்றார். (எ)

# மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

### தமிழக அரசியல் கட்சிகள் வேண்டுகோள்



சென்னை, நவ.19

இந்திய கடல் எல்லையில் வைத்து தமிழக மீனவர்கள் இருவர் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உள்ளாகி காயமடைந்தமை குறித்து தமிழக அரசியல் கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக்கழகம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் இந்திய மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கட்சிகள் கோரியுள்ளன.

இந்நிலையில் புதுடில்லியில் இடம்பெற்ற ராஜதந்திர பேச்சில் வெற்றி காண முடியாது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் செயலாளர் வை.கோபாலசுவாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ், இலங்கைக் கடற்படையினரின் இந்த நடவடிக்கை ஒரு குற்றவியல் சம்பவம் என்று குற்றம் சுமத்தியுள்ளார். (எ)

## தினசரி ராசி பலன் 19.11.2016

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 - 8.45 | |
| | மாலை : 4.45 - 5.45 | |
| ராகு காலம் | : 9.00 - 10.30 | ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார் ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம் கும்பகோணம், தமிழ்நாடு. (maruthi_jaya2003@yahoo.co.in) |
| குளிகன் | : 6.00 - 7.30 | |
| எமகண்டம் | : 1.30 - 3.00 | |

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை கிடைத்து வெற்றி நல்கும் நன்னாள்.

**ரிஷபம்** :தனம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் கிடைக்கும்.

**மிதுனம்** : ஓய்வு - உழைப்பினால் உண்டான களைப்பு நீங்கி ஓய்வு கிடைக்கும்.

**கடகம்** : மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்று குறைவாக இருக்கும்.

**சிம்மம்** : சினம் - வீண் கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

**கன்னி** : உற்சாகம் - அனைத்துக் காரியங்களிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

**துலாம்**: சிந்தனை - உங்கள் சிந்தனைகள் சிறந்து மிளிரும் அறிவு ஒளிரும் நன்னாள்.

**விருச்சிகம்**: செலவு - திடீர் செலவீனங்கள் ஏற்படும்.

**தனுசு**: பாசம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் அனைவரிடத்திலும் அன்புடன் பழக வேண்டிய நன்னாள். சந்திராஷ்டமம்: மூலம், பூராடம்

**மகரம்**: நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல கிடைக்கும்.

**கும்பம்**: பெருமை - இன்று திடீர் புகழாரம் உங்கள் வாசல் நாடி வரும் நன்னாள்.

**மீனம்**: லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும் நன்னாள்.




ஹற்றன் மல்லியப்பூ சந்தியில் தோட்டத் தொழிலாளர்களால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. 20 கிலோகிராம் கொழுந்து பறித்தால் 730 ரூபா சம்பளம் தருவதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கூட்டு ஒப்பந்தத்தில் இந்த நிபந்தனைகள் உள்வாங்கப்படவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# ஆஸியில் புகலிடம் கோரிய ஈழ இளைஞன் திடீர் சாவு



சிட்னி, நவ.19

இலங்கையிலிருந்து புகலிடம் கோரும் நோக்கில் 'மெராக்' கப்பலில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று, பின் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு, அங்கு குடியமர்ந்த ஒருவர் திடீரெனச் சாவடைந்துள்ளார்.

அஜிதன் யுவராஜன் (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு திடீரெனச் சாவடைந்துள்ளார் என்று ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சிட்னியில் வசித்து வந்த இவருக்கு வலிப்பு நோய் ஏற்பட்டது என்றும் இதுவே அவர் திடீர் சாவடைவதற்குக் காரணம் என்றும் அவரது நண்பர் ஒருவர் அந்த ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அஜிதனுக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டதுஎன்றும் அப்போது அவருடன் யாரும் கூட இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அஜிதன் இயற்கை மரணம் அடைந்தார் என்று தெரிவிக்கப் படுகின்ற போதிலும் இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அஜிதனின் உறவினர்கள் எவரும் ஆஸ்திரேலியாவில் இல்லாத நிலையில் அவரது உடலை இலங்கைக்குக் கொண்டுசெல்வதா அல்லது அவரது உறவினர்களை இங்கு வரவழைப்பதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# யானை தாக்கி விவசாயி காயம்

அம்பாறை, நவ.19

அம்பாறை, திருக்கோவில் தாண்டியடி வயல் பிரதேசத்தில் வயலுக்குச் சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருக்கோவில் 2ஆம் பிரிவு நாவலடி வீதியைச் சேர்ந்த 40 வயதுடைய விவசாயி சம்பவதினம் காலை தாண்டியடி கல்குவாரிக்கு அருகில் உள்ள வயலுக்கு தெளி கருவி மூலம் மருந்து தெளிப்பதற்காகச் சென்ற போது யானை தாக்கியதில் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் திருக்கோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ)

# அமெ.டொலரின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, நவ.19

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 150 ரூபா 25 சதமாக அதிகரித்துள்ளதாக சந்தை நிலவரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி ஒரு டொலருக்கான கொள்வனவு விலை 146 ரூபா 49 சதமாக உயர்ந்துள்ளது.

இதேவேளை, பிரிட்டன் பவுண்ஸ் ஒன்றின் விற்பனை விலை 187 ரூபா 55 சதமாக உயர்ந்துள்ளது. அதன் கொள்விலை 181 ரூபா 27 சதமாக அதிகரித்துள்ளது.

யூரோ ஒன்றின் விற்பனை விலை 161 ரூபா 86 சதமாக அதிகரித்துள்ளது.

ஒரு யூரோவின் கொள்விலை 155 ரூபா 82 சதமாகக் காணப்படுகின்றது. (எ)

## சாவகச்சேரியில் நாளை பாரதி விழா

யாழ்ப்பாணம், நவ.19

தென்மராட்சி இலக்கிய அணி ஏற்பாடு செய்துள்ள பாரதி விழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு சாவகச் சேரி, சங்கத்தானை, தமிழ்க் கோட்டத்தில் ( கம்பன் கல் லூரி வளாகத்தில்), தென்மராட்சிக்கல்வி வலயப்பிரதிக்கல்விப்பணிப்பாளர்நா.கந்ததாசன் தலைமையில் நடைபெறும்.

வண.கலாநிதி எஸ். ஜெபநேசன் "என்றும் இளையவன் எங்கள்பாரதி" என்றதலைப்பில் எழிலுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து போராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் தலைமையில் 'படிப்போர் மனதில் பாரதி ஆழப்பதிவது' என்ற தலைப்பில் விவாத அரங்கு நடைபெறும்.

'புதுமைவாதியாகவே!' என உதயகுமாரும், 'கவிஞனாகவே' எனஅ.வாசுதேவாவும், 'ஆன்மீக வாதியாகவே' என சு.சுதர்சனும், 'நாட்டுப்பற்றாளனாகவே' என பா.விக்னேஸ்வரனும் பெண்ணியவாதியாகவே என ச.மார்க்கண்டும் வாதிடுவர். (ம)

## சாயி பாபாவின் அவதார தினம்

பருத்தித்துறை, நவ.19

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 91 ஆவது அவதார தின நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள் பருத்தித்துறை பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சாய் மந்திர் தலைவர் சி.பிரசாத் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஆன்மீக உரையை க.ரமணனும் சிறப்புரையை மருத்துவர் சி.சிவசங்கரும் நிகழ்த்துவர். (ஜ-31)



யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகம் ஆரம்பித்து 25 ஆவது ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்களால் நடைபவனி ஒன்று நடத்தப்பட்டது:

1991 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. 25 வருடங்களாக இயங்கி வரும் இவ்வளாகம் தற்போது வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இவ் வளாகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா ரயில்வே நிலையம் முன்பாகக் காலை 8 மணிக்கு ஆரம்பமாகிய நடைபவனி, சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலூடாக கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து வவுனியா நகரம், பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தான வீதியை அடைந்து அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகம் ஊடாக சென்று மன்னார் வீதி வழியாக பூங்கா வீதியிலிருக்கும் பல்கலைக்கழக வளாகத்தைச் சென்றடைந்தது. (ஜ-100)

# மோசடி வர்த்தகர்களைப் பிடிக்க புதிய சுற்றிவளைப்புப் பிரிவு!

## பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை

கொழும்பு, நவ.19

பொதுமக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பொழுது ஒரு சில வர்த்தகர்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்றனர்.

இவ்வாறான வர்த்தகர்களை உடனடியாகக் கண்டறிவதற்காக சுற்றிவளைப்புப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சில வர்த்தகர்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் முறைப்பாடுகள் அதிகார சபைக்குக் கிடைத்ததை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரிவு, வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவர் களைத் தெளிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

, கைத்தொழில் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அறிவுரைக்கமைய இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இது தொடர்பான முறைப்பாடுகளை வழங்குவதற்கு வசதியாக அதிகாரசபை பின்வரும் தொலைபேசி இலங்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேல் மாகாணம் 0771088914, 0771088907, தென் மாகாணம் 0771088903, வடக்கு மாகாணம் 0771088914, ஊவாமாகாணம் 077108 8895, கிழக்கு மாகாணம் 0771088899, வட மத்திய மாகாணம் 0771088907, சப்ரகமுவ மாகாணம் 0771088904, வட மேல் மாகாணம் 0771088902, மத்திய மாகாணம் 0771088905. (ம)

## மிருசுவில் நூலக வாசிப்பு மாத நினைவுநாள் இன்று

பருத்தித்துறை, நவ.19

மிருசுவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் மற்றும் பரிசில் வழங்கல் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நூலக மண்டபத்தில் வ.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் திருமதி கோ.முகுந்தினியும் சிறப்பு விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி, பிரம்மஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள், அருட்பணி எக்ஸ்.டபிள்யூ. ஜேம்ஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

## ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும்

சுன்னாகம், நவ.19

சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி.யா.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும்.

சுன்னாகம் சென். அன்ரனிஸ் பங்குத்தந்தை அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும், சிறப்பு விருந்தினராக லயன் செ.மகாதேவாவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன் ஆற்றுவார். (இ-7)

## பருத்தித்துறை சந்தையில் கண்காணிப்புக் 'கமரா'

பருத்தித்துறை, நவ.19

பருத்தித்துறை நவீன சந்தையில் 'கண்காணிப்பு கமராக்கள்' பொருத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகர சபையின் ஏற்பாட்டில் இந்தக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. நவீன சந்தையின் உள்பகுதி வர்த்தக நிலையங்கள் மற்றும் வெளிப்புறத்தில் காணப்படும் பஸ் நிலையம் உட்பட பல இடங்களை இதன் மூலம் அவதானிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-31)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு யாழ். நகரில் இன்றும் நாளையும்

## கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,நவ.19

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் 'வடக்கு மாகாண சாதனையாளர் கௌரவிப்பு' நிகழ்வு இன்றும், நாளையும் மூன்று அமர்வுகளாக மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமை யில் யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய முதல்நாள் அமர்வு காலை 9 மணிக்கு இடம்பெறும். இதில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்து கொள்வர்.

இரண்டாம் அமர்வு பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். இரவீந்திரனும், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் எஸ்.றமேஸும் கலந்து கொள்வர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் மூன்றாம் அமர்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும், கௌரவ விருந்தினராகப் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யு.சந்திரகுமாரும் கலந்துகொள்வர்.

இருநாள் நிகழ்வுகளிலும் வடமாகாணத்தில் சாதனை புரிந்த மாணவர்கள், பாடசாலைகள் மற்றும் பாடசாலைக்குரிய ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



வடமாகாண மோட்டார் போக்குவரத்து அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபையினரால் யாழ். மாவட்ட ஓட்டோ சாரதிகளுக்கான விழிப் புணர்வுக் கருத்தரங்கு யாழ்.மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இக் கருத்தரங்கு இடம்பெற்றது.

மோட்டார் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளின் வளப்படுத்தலில் இடம்பெற்ற இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் ஓட்டோ சாரதிகளுக்கு வீதி ஒழுங்குகள் பற்றியும் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் பற்றியும் விளக்கப்பட்டது. "பய ணிகள் சேவையில் ஈடுபடும் சார திகளின் கடமைகள் பொறுப்புக்கள்" எனும் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய நூல் ஒன்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (இ-12)

# புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக டில்லியில் ஆர்ப்பாட்டம்

## அரசியல் கட்சிகளின் ஆதரவில் சிறுபான்மையினர் முன்னெடுத்தனர்



டில்லி, நவ.19

இந்திய மத்திய அரசு கொண்டு வரவிருக்கும் புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக நேற்று முன்தினம் அரசியல் கட்சிகளின் ஆதரவோடு சிறு பான்மையினர் டில்லியில் ஆர்ப் பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆத ரவு தெரிவித்து டில்லியின் துணை முதல்வர் மனிஷ் சிசோ தியா, இந்திய காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்த ராஜ்ய சபை நாடா ளுமன்ற உறுப்பினர் திக் விஜய் சிங், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் பொது செயலா ளர் சீதாராம் யச்சூரி, தமிழ் நாட் டின் திராவிட முன்னேற்ற கழகத் தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஆம் ஆத்மி, காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம் யூனிட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ், திராவிடர் கழகம், ஐக்கிய ஜனதாத் தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம் உள்ளிட்ட பல கட்சிகள் இதற்கு ஆதரவு தெரி வித்திருக்கின்றன.

இந்தக் கல்விக் கொள்கை யால், கல்வியில் வகுப்புவாதம், வணிகமயம் மற்றும் மத்தியில் அதிகாரம் குவிக்கப்படும் நிலைமை ஏற்படும் என்பதால் இதனை எதிர்ப்பதாக இந்த போராட்டத்தை ஒருங்கிணைத் திருக்கும் சிறுபான்மையினர் அமைப்பின் தலைவர் விக்டர் தாஸ் தெரிவித்திருக்கிறார்.

சமஸ்கிருதத்தை உட்புகுத் துவதாலும், யோகாவை கட்டாய மாக்குவதாலும் மத்திய அரசின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற் றவாறு கல்வித்துறை மாறி விடும் அபாயம் இருப்பதாக சிறு பான்மையினர் கூறுகின்றனர்.

இதேவேளை கல்வியை வணிகமயமாக்கினால், தலித்து கள், பழங்குடியினர், மலைவாழ் மக்கள் அதிக பாதிப்படைவர் என் றும் தெரிவிக்கப்படுகிறது.

மாறிக் கொண்டிருக்கும் உலக நிலைமைகளைக் கருத் தில் கொண்டு இந்தியாவில் மாணவர்களுக்குத் தேவை யான திறமைகளையும், அறி வையும் வழங்கும் நோக்கில் கல்வி, புத்தாக்கம், ஆய்வு ஆகி யவற்றின் தரத்தை அதிகரிப்ப தற்கு தேசிய அளவிலான இந்தப் புதிய கல்விக் கொள்கை உதவும் என்று இந்திய அரசு தெரிவித் துள்ளது. (எ)

---

## சுஷ்மாவுக்கு சிறுநீரகம் வழங்க முன்வந்தார் பொலிஸ் அலுவலர்!



டில்லி, நவ.19

சிறுநீரகம் செயலிழந்துள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வரா ஜுக்கு சிறுநீரகத் தானம் செய் யத் தயாராக இருக்கிறேன் என்று மத்திய பிரதேசத்தின் போக்குவரத்து பொலிஸ் அலு வலர் கவ்ரவ் சிங்கங்கி (வயது 26) கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறிய தாவது:

"சுஷ்மாவுக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டதாகக் கேள்விப் பட்டு மிகவும் வருத்தமுற்றேன். எனது சிறுநீரகம் சுஷ்மா வுக்கு பொருந்தினால் சிறு நீர கத்தானம் செய்யத் தயாராக உள்ளேன். சுஷ்மா சிறந்த தலைவர். அதுமட்டுமல்ல அவர் சிறப்பாகப் பணியாற்றி வரு கின்றார் என்பதாலும் இந்த முடிவை எடுத்துள்ளேன்" - என்றார். (எ)

---

# மோடியைத் தேசத்துக்கு தத்துக் கொடுத்துவிட்டேன்

## இப்படிக் கூறினார் அவரது தாயார்



டில்லி, நவ.19

மோடி எனது வயிற்றில் பிறந் தாலும், அவன் பாரத மாதா வின் தாயாகி பல வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது, அவன் எனது மகன் கிடையாது. அவரை இந்த தேசத்துக்குத் தத்துக் கொடுத்து விட்டேன் என்று தெரி வித்தார் மோடியின் தாயார்.

கறுப்புப் பணத்தை ஒழிப் பதற்காக, 500 மற்றும் 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்றும் அதனை அடுத்த மாத இறுதிக்குள் வங்கிகளில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என்று பிரதமர் மோடி அறி வித்துள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, ராகுல் காந்தி உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்கள் வங்கி களில் வரிசையாக நின்று செல் லாத 500 மற்றும் 1000 ரூபா தாள்களை மாற்றி வருகின் றனர்.

அரசியல் தலைவர்கள் வரி சையில் நின்று பணத்தை மாற்றும் காட்சிகளை பல்வேறு ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டு வந்த நிலையில், பிரதமர் மோடியின் தாயார் வங் கியில் பணத்தை மாற்றும் காட் சியையும் புகைப்படம் எடுத்து வெளியிட்டன.

இதையடுத்து, சில ஊடகங் கள் மோடியின் தாய் ஹீரா பென் னிடம் கறுப்புப் பண விவகாரம் மற்றும் மோடியின் அறிவிப்பு தொடர்பில் பேட்டி எடுத்துள்ளன.

இதன் போது பேசிய மோடி யின் தாயார், "மோடி எனது வயிற்றில் பிறந்தாலும், அவன் பாரத மாதாவின் தாயாகி பல வருடங்கள் ஆகிவிட்டன.

இப்போது, அவன் எனது மகன் கிடையாது. அவரை இந்த சேதத்துக்கு தத்துக் கொடுத்து விட்டேன்" என்று கூறியுள்ளார். (எ)

---

### சந்தையில் திடீர் தீ விபத்து;

# டில்லியில் பற்றி எரியும் பிளாஸ்டிக் கழிவுகள்!

டில்லி, நவ.19

டில்லியின் முண்ட்கா பகுதி யில் உள்ள சந்தையில் நேற்றுக் காலை திடீரென தீ விபத்து ஏற் பட்டது.

இதனால் அருகிலுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் தீக்கிரை யாகியுள்ளன. கிழக்கு டில்லியின் முண்ட்கா பகுதியில், டில்லி மெட்ரோரயில் நிலையம் அருகே அந்தச் சந்தை அமைந்துள்ளது.

இதன் அருகே பிளாஸ்டிக் கழிவுகள் கொட்டப்படுவது வழக் கம். மேலும் அந்தப்பகுதி ஆசியா வின் மிகப்பெரிய பிளாஸ்டிக் குப்பை கிடங்காகக் கருதப்படு கிறது.

அங்கு நேற்றுக்காலை திடீ ரென தீ விபத்து ஏற்பட்டது. தீ விரைவில் பரவியதால் அந் தப்பகுதியே புகை மண்டலமா கக் காட்சி அளிக்கிறது.

இந்த விபத்தில் எவருக் கும் காயமோ, உயிர்ச்சேதமோ ஏற் படவில்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

33 தீயணைப்பு வாகனங் கள் தீயை அணைக்கும் பணி யில் ஈடுபட்டுள்ளன.

தீ மேலும் பரவாமல் இருப் பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

ஏற்கனவே காற்று மாசால் பெரியளவில் பாதிப்பைச் சந் தித்து வரும் தலைநகர் டில்லி யில், தற்போது பிளாஸ்டிக் கழிவுகள் பற்றி எரிந்து வருவ தால் காற்றில் நச்சுக்கள் அதி கரிக்கும் நிலை ஏற்பட்டுள்ள தாக சுற்றுச்சூழல் துறையினர் கவலை தெரிவித்துள்ளனர். (எ)

---

# 'ஜெ' மீதான பரிசுப் பொருள்கள் வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைப்பு

டில்லி, நவ.19

தமிழக முதல்வர் ஜெயலலி தாவுக்கு எதிராக சி.பி.ஐ. தொடர்ந்த பரிசுப்பொருள்கள் தொடர்பான வழக்கு விசாரணையை எதிர் வரும் ஜனவரி 3 ஆவது வாரத் துக்கு உச்ச நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

ஜெயலலிதா 1991 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பதவி வகித்தபோது, அவர் தன் னுடைய பிறந்த நாளில் ரூ.2 கோடி மதிப்புள்ள காசோலை கள் உள்ளிட்ட பரிசுப்பொருள் களைப் பெற்றார் என்று குற்றச் சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக சி.பி.ஐ. வழக் குப்பதிவு செய்தது.

இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் 2011 ஆம் ஆண்டு, செப்ரெம்பர் 30 ஆம் திகதி ரத்துச் செய்ய உத்தரவிட் டது.

இதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் சி.பி.ஐ. மேன்முறை யீடு செய்தது.

மேன்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை உச்ச நீதி மன்றத்தில் நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், அஷோக் பூண் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் நேற்று முன் தினம் விசா ரணைக்கு வந்தது.

சி.பி.ஐ. தரப்பில் மூத்த சட்டத் ரணி பி.எஸ். பட்டுவாலியா முன் னிலையானார்.

ஜெயலலிதா தரப்பில் முன் னிலையான சட்டத்தரணி கவரவ் அகர்வால், தங்கள் தரப்புக்கு மேலும் சிறிது அவகாசம் தேவை என்பதால் வழக்கை ஒத்திவைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதி பதிகள் இந்த வழக்கின் மீதான விசாரணையை எதிர்வரும் ஜன வரி மாதம் 3 ஆவது வாரத்துக்கு ஒத்திவைத்தனர். (எ)

---

# பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்த வலியுறுத்து!



டில்லி, நவ.19

பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதி பதி ஆட்சியை நடைமுறைப் படுத்துங்கள் என்று அந்த மாநில காங்கிரஸ் கட்சி வலியு றுத்தியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் அகா லிதளம்-பா.ஜ.க. தலைமையி லான ஆட்சி நடைபெற்று வரு கிறது. காங்கிரஸ் பிரதான எதிர்க் கட்சியாக இருந்து வருகிறது.

இந்தநிலையில் பஞ்சாப் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ளதால் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அந்த மாநில காங்கிரஸ் கட்சி வலியுறுத்தி உள்ளது.

பஞ்சாப் மாநில காங்கிரஸ் தலைவர் கட்டன் அமரிந்தர்சிங் தலைமையிலான தேர்தல் குழு, தலைமை தேர்தல் ஆணைய ளர் நஜீம் ஜைதியை நேரில் சந் தித்து இது தொடர்பான மனுவை அளித்தது.

சுதந்திரமான மற்றும் நியா யமான தேர்தல் அகாலிதளம் - பா.ஜ.க. தலைமையிலான அரசின் கீழ் சாத்தியம் இல்லை என்று காங்கிரஸ் தம்முடைய மனுவில் குற்றஞ்சாட்டியுள் ளது. (எ)

# எரிபொருள் தாங்கி வெடித்து 70 பேர் பலி!

## மொசம்பிக் நாட்டில் நடைபெற்ற துயரம்



மபுடோ, நவ.19

கிழக்கு ஆபிரிக்காவின் மொசம்பிக் நாட்டில் எரிபொருள் தாங்கி வெடித்து விபத்துக்குள்ளானதில் 70 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மலாவி நாட்டின் எல்லையில் உள்ள டெடி மாகாணத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

எல்லைப் பகுதியிலுள்ள கடற்கரைப் பகுதியில் இருந்து பெற்றோல் ஏற்றிக் கொண்டு சென்ற போது தாங்கியில் வெடித்து விபத்து ஏற்பட்டது.

தலைகீழாகக் கவிழ்ந்த டாங்கரில் இருந்து மக்கள் பெற்றோலை எடுத்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது திடீரென தாங்கி வெடித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

## அமெ.உளவுத்துறை தலைவர் ராஜிநாமா!

வொஷிங்டன், நவ.19

அமெரிக்க உளவுத்துறைத் தலைவர் ஜேம்ஸ் கிளாப்பர் தனது பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார். கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட்ட்ரம்ப் அபார வெற்றி பெற்றார். ஆனால் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டன் தோல்வியைத் தழுவினார்.

இந்தநிலையில், ஒபாமாவின் ஆட்சியில் அமெரிக்க புலனாய்வுத் துறைத் தலைவராக பதவி வகித்து வரும் ஜேம்ஸ் கிளாப்பர் தனது பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார். இதற்கான ராஜிநாமா கடிதத்தை அவர் அமெரிக்க அரசிடம் அளித்துள்ளார். இருப்பினும், பராக் ஒபாமா ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து வெளியேறும் வரை கிளாப்பர் பதவியில் தொடர்ந்து இருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜேம்ஸ் கிளாப்பர் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தேசிய புலனாய்வுத்துறை இயக்குநராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## துருக்கியில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் மூவர் உயிரிழப்பு

இஸ்தான்புல், நவ.19

துருக்கியில் ஏற்பட்ட திடீர் நிலச்சரிவால் செப்பு சுரங்கத்துக்குள் சிக்கி 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

சுரங்கத்துக்குள் புதையுண்டிருக்கும் 13 தொழிலாளர்களை மீட்பதற்கான தேடும் பணிகள் முழுமூச்சில் நடைபெற்று வருகின்றன.

துருக்கியின் சிர்ட் மாகாணத்துக்கு உட்பட்ட சிர்வான் மாவட்டத்தில் தனியாருக்குச் சொந்தமான செப்பு சுரங்கம் ஒன்றுள்ளது.

நேற்று வழக்கம்போல் அந்தச் சுரங்கத்தில் செப்புப்பாளங்களைத் தோண்டி எடுக்கும் பணி நடைபெற்று வந்தது.

இதன்போது மேல் பகுதியில் ஏற்பட்ட நிலச் சரிவால் சுரங்கத்தின் ஒருபகுதி இடிந்து, மண்மேடானது.

இடிபாட்டில் சிக்கி உயிரிழந்தவர்களின் 3 சடலங்களைக் கண்டெடுத்துள்ள மீட்புக் குழுவினர், உள்ளே சிக்கியுள்ள மேலும் 13 தொழிலாளர்களை உயிருடன் மீட்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ)

## பிரான்ஸ் அரசின் உயரிய விருது பான் கீ மூனுக்கு!

பரிஸ், நவ.19

பிரான்ஸ் அரசின் மிக உயரிய விருதான 'லெஜியான் ஒப் ஹானர்' விருது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகநாடுகள் அனைத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்காகப் போராடிய பிரான்ஸைச் சேர்ந்த மாவீரன் நெப்போலியனால் 1802 ஆம் ஆண்டு 'லெஜியான் ஒப் ஹானர்' விருது உருவாக்கப்பட்டது. 'செவாலியே' உட்பட 5 பிரிவுகளாக அளிக்கப்படும் இந்த விருது பிரான்ஸின் மிகப் பெருமைக்குரிய விருதாக மதிக்கப்பட்டு வருகிறது.



பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உலக நாடுகளிடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்தியமைக்காக பான் கீ மூனுக்கு இந்த உயரிய விருது அளிக்கப்படுவதாக பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹொலண்டே புகழாரம் சூட்டினார்.

இந்த விருதை தனக்கு அளிப்பதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையை பிரான்ஸ் அரசு கௌரவப்படுத்தி உள்ளதாக பான் கீ மூன் குறிப்பிட்டார். (ஏ)

## ஆஸ்திரேலிய விசாவில் புதிய கட்டுப்பாடு

கான்பரா, நவ.19

ஆஸ்திரேலியாவில் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான விசாவில் புதிய அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

திறமை வாய்ந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்காக ஆஸ்திரேலியாவில் 457 விசா என்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இதன்படி, தொழில் ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் அடுத்த வேலையைத் தேடுவதற்காக 90 நாள்கள் கால அவகாசம் கொடுக்கப்படும்.

இந்த அவகாசத்தை 60 நாள்களாகக் குறைத்துள்ளதாக குடியேற்றத்துறை அமைச்சர் பீற்றர் டட்டன் தெரிவித்துள்ளார். மேலும் ஆஸ்திரேலிய குடிமகன்களுக்காக வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். (ஏ)

## அமெ.பாதுகாப்பு ஆலோசகராக ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி

வொஷிங்டன், நவ.19

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி மைக்கேல் பிளின் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள குடியரசுக்கட்சிவேட்பாளர் டொனால்ட்ட்ரம்ப், எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அந்தநாட்டின் 45 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார்.

தனது தலைமையிலான அமைச்சரவை மற்றும் நாட்டின் முக்கிய துறைகளுக்கான தலைமை அதிகாரிகளைத் தெரிவு செய்யும் பணியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுவரும் ட்ரம்ப், தினமும் புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.



இந்த நிலையில், அமெரிக்க பாதுகாப்புத்துறை புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரான மைக்கேல் பிளின் என்பவரை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அவர் தெரிவு செய்துள்ளார். ட்ரம்பின் தீவிர ஆதரவாளரான மைக்கேல் பிளின், இதற்கு முன்னர் தேசிய பாதுகாப்புத் தொடர்பா ட்ரம்ப்புக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வந்ததுடன், அவரது தேர்தல் பிரசார கூட்டங்களில் ஆரம்ப நிலை பேச்சாளராக இருந்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## ட்ரம்ப்பைச் சந்தித்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் அபே!



நியூயோர்க், நவ.19

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்பை ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் ட்ரம்ப் சந்தித்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட்ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் எதிர் வரும் ஜனவரி மாதம் பதவி ஏற்க உள்ளார். இந்தநிலையில் தனது அரசில் நியமிக்கப்பட உள்ள புதிய அமைச்சர்கள் தெரிவு உள்ளிட்ட பணிகளை மேற் கொண்டுள்ளார்.

இதற்கிடையே சர்வதேச நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசிவருகிறார். இந்த நிலையில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நேற்று முன்தினம் பெருநாட்டில் நடைபெறும் ஆசிய-பசிபிக் வர்த்தக மாநாட்டில் பங்கேற்கச் செல்லும் வழியில் நியூயோர்க் சென்றார். அங்கு மேன்ஹாட்டனில் உள்ள ட்ரம்ப் மாளிகைக்குச் சென்று ட்ரம்பை சந்தித்துப் பேசினார்.

இந்தச்சந்திப்பு சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது. அப்போது இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்தினார்கள். அது குறித்து ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். இதன்போது அவர் கூறியதாவது:

"ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப்புக்கு வாழ்த்துக் கூறினேன். எங்களிடையே நல்ல சூழ்நிலையில் வெளிப்படையான பேச்சு நடைபெற்றது. அவரை சந்திக்கும் முன்பு எதிர்காலத்தில் இரு நாடுகளிடையேயான நட்பு தொடருமா என்பதில் எனக்கு சந்தேகம் இருந்தது.

ஆனால் அவரை சந்தித்தபின் அமெரிக்காவின் புதிய தலைவரான ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற முடியும் என்ற மிகப் பெரிய நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது"-என்றார். (ஏ)

## பருவநிலை மாற்றத்தை தடுக்க 100 கோடி டொலர்

### 196 நாடுகள் நேற்று கூட்டுப் பிரகடனம்

மராக்கேஷ், நவ.19

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், இதற்குத் தேவையான 10 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களைத் திரட்டித்தரவும் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் 196 நாடுகள் நேற்று கூட்டுப்பிரகடனம் செய்துள்ளன.

புவி வெப்பமடைவதால் ஏற்படும் பருவநிலை மாற்றத்தைத் தடுக்க பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாநாட்டில் 195 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை சமாளிக்க, வளரும் மற்றும் ஏழை நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் 10 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை (ரூ.6.70 லட்சம் கோடி) நிதியுதவி அளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு நிலவியது.

இந்தநிலையில் இறுதிவரைவை பிரகடனமாக அறிவிக்க 196 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற பருவநிலை மாற்றத்தைத் தடுக்கும் 22 ஆவது மாநாடு மொராக்கோவில் உள்ள மராக்கேஷ் நகரில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டின்போது, புவி வெப்பமயமாதலை எதிர்கொள்ள முன்னெடுக்க வேண்டிய அவசர கடமை என்ற தலைப்பில் 196 நாடுகளின் சம்மதத்துடன் 'மராக்கேஷ் நடவடிக்கை பிரகடனம்' நிறைவேற்றப்பட்டது. (ஏ)

# வடக்கு கல்வியின் இன்றைய நிலை கேள்விக்குறியாகி கவலை தருகிறது

## மாணவரின் சிந்தனை திருப்பப்படுகிறது என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் விசனம்

யாழ்ப்பாணம், நவ.19

வடக்கு மாகாணத்தில் விசேடமாக யாழ். மாவட்ட மாணவர்கள் பாரம்பரியமாக கல்வி, கேள்வி அறிவுகளில்சிறந்துவிளங்கியவர்கள். ஆனால் எமது கல்வி தொடர்பிலான இன்றைய நிலைமை கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. இது கவலை தருகிறது.

-இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உரும்பிராயில் இயங்கி வரும் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய பரிசளிப்பு விழா நேற்று இடம்பெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர் தெரிவித்தவை வருமாறு:-

பிஞ்சுக் குழந்தைகளின் கல்வி புகட்டல் நிகழ்வுகளில் ஆசிரியர்கள் மிகவும் அவதானமாகச்செயற்படல் வேண்டும். ஐந்தாம் தர புலமைப் பரீட்சை என்பது மாணவர்களின் உளப் பாங்குவிருத்தியை மதிப்பீடு செய்வதற்கு மாறாக பெற்றோர்களின் கௌரவங்களையும் மதிப்புக்களையும் அளவீடு செய்யும் ஒரு கருவியாக மாறியிருப்பது கவலை அளிக்கின்றது.

உண்மையில் பெற்றோர்கள் தமது குழந்தைகளை வைத்து தமது போட்டி பொறாமைகளை நடைமுறைப்படுத்துவது அக்குழந்தைகளுக்கு எதிரான துரோகமாகும்.

இளஞ்சிறார்களின் கல்வி புகட்டல் நிகழ்வுகள் இயற்கையோடு இணைந்ததாகவும் விளையாட்டுக்களுடன் சேர்த்து புகட்டப்படுபவை யாகவும் அமைதல் அத்தியாவசியம். மாணவ மாணவியர் இயற்கையை செயன்முறையில் அறிந்து கொள்வதற்கும் பாடங்களை வலிந்து கற்கின்றோம் என்ற உணர்வின்றி கற்றுக் கொள்வதற்கும் எமது விருத்தியடைந்த கற்பித்தல் முறை மிகவும் அத்தியாவசியமானது.

கற்பித்தல்கள் எளிமையான முறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பிள்ளைகளின் மனதிலும் நிலைத்திருக்கக்கூடிய வகையில் புதிய யுக்திகளைப் பயன்படுத்தி கற்பிக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகின்றது.

உங்கள் பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக இருப்பதால் மாணவர்கள் விருப்புடன் பாடசாலைக்குச் சமுகம் கொடுக்கக் கூடிய வகையில் கற்பித்தல் முறைமைகள் அமைவது அவசியம்.

தமது ஆசிரிய, ஆசிரியைகள் அன்பானவர்கள், அரவணைப்புள்ளவர்கள், இனிமையானவர்கள் என இந்தக் குழந்தைகள் எண்ணும் அளவுக்கு கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறல் வேண்டும்.

பழைய கல்வி முறைமை தற்கால கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்திசைவாக அமையாது. இன்றைய காலகட்டத்தில் வன்சொற்களும் வன்மையான கண்டிப்புக்களும் மாணவர்களுக்கு ஒவ்வாதன என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அண்மைய காலத்தில் வன்மையான உறவுமுறை எங்கள் சமூகத்தினுள் உள்நுழைந்து விட்டது. எடுத்ததற்கெல்லாம் "வாடா! போடா! நாயே! சீ சனியனே!" என்று நாம் சொல்லப்பழகி விட்டோம். இவ்வாறான உறவு முறை, பழக்கவழக்கங்கள் அத்தனை சுலபத்தில் மாறமாட்டா. ஆனால் முயன்றால் முடியும் என்பது எனது கருத்து. உதாரணத்துக்கு ஆசிரியர்கள் சேர்ந்து ஒவ்வொரு குழந்தையையும் பன்மையில் அழைத்துப் பாருங்கள். அதாவது "இருங்கள், எழுந்திருங்கள், வாசியுங்கள்" என்று கூறிப் பாருங்கள். வித்தியாசம் தெரியவரும்.

வடமாகாணத்தில் உள்ள மாணவ மாணவியர்கள் விசேடமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியர்கள் பாரம்பரியமாகக் கல்வி கேள்வி அறிவுகளில்சிறந்துவிளங்கியவர்கள். ஆனால், எமது கல்வி தொடர்பிலான இன்றைய நிலை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளமை கவலை தருகின்றது.

எமது மாணவர்களை கல்வி கற்க விடாது அவர்களின் சிந்தனைகளை வேறு கோணங்களில் திசை திருப்பவும் தேவையற்ற பழக்க வழக்கங்களில் ஈடுபடுத்தவும் பாடசாலைகளுக்குள்ளேயும் வெளியேயும் பலதீய சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

இவர்களின் செயற்பாடுகளை முறியடிப்பதற்காக பொலிஸாரும் மக்கள் குழுக்களும் முயற்சி செய்கின்ற போதும் எமது மாணவர்களில் சிலரும் வேறு பல சதிகாரக் கும்பல்களும் இந் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது அறியப்பட்டுள்ளது.

எனவே மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் அறிமுகமில்லாதவர்களுடன் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதைத் தவிருங்கள்.

நாங்கள் சிறுவர்களாக இருந்த போது எல்லோரையும் நம்பினோம். அவர்களும் எமது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொண்டார்கள். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. சுயநலம் தலைவிரித்தாடுகின்றது. இன்னொருவரிடம் இருந்து எதைப் பெறலாம், எதைப் பறிக்கலாம் என்பதே பலரின் சிந்தனையாகப் போய்விட்டது.

அவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் நம்பிக்கைப் பாதையில் மிகவும் கவனமாகப் பயணிக்க வேண்டும்.

மாணவர்கள் யாவரும் உங்கள் கல்வி நடவடிக்கைகளில் சிறப்புற செயற்பட வேண்டும்.- என்றார். (ரு)

# நீரிழிவு தின விழிப்புணர்வு...










நீரிழிவு தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணவு நடைபவனியும், கருத்தரங்கும் நேற்று வெள்ளிக்கிழமை வடமராட்சியில் நடைபெற்றன.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்றிலில் இருந்து நடைபவனி ஆரம்பமானது.

லயன்ஸ் கழக நூற்றாண்டு ஆளுநர் வை.தியாகராசா தலைமையில் நடைபெற்ற நடைபவனியில் பருத்தித்துறை பிர தேச செயலர் இ.த.ஜெயசீலன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, மருதங்கேணி பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன், கரவெட்டி பிரதேச சபை செயலாளர் அ.வினோராஜ், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் இ.கேதீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.அகிலதாஸ், வி.சிவயோகம் மற்றும் பிர தேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொலிஸார், பாடசாலை அதிபர்கள், லயன்ஸ் கழகத்தினர், நீரிழிவு நோயாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் இருந்து ஆரம்பமான நடைபவனி, பருத்தித்துறை யாழ்.வீதி வழியாகச் சென்று நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் திருமண மண்டபத்தை முற்பகல் 10 மணியளவில் சென்று நிறைவடைந்தது.

ஆலய திருமண மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் நீரிழிவு நோயாளர்களுக்கான மருத்துவ பரிசோதனை வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மூன்று மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன. அந்தண குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக பசுமாடு ஒன்றும் அதன் உணவுக்கான 10 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டன.

மேலும் பயன்தரும் மரக்கன்றுகளும், இலைக்கஞ்சியும், நீரிழிவு நோயாளர்களுக்கான பிஸ்கட்டும் வழங்கப்பட்டன. அத்துடன் லயன்ஸ் கழகத்துக்கு லண்டனில் இருந்து வருகை தந்த லண்டன் லயன்ஸ் கழக உறுப்பினர் ஒருவரால் நிதியுதவியும் வழங்கப்பட்டது. (ஐ-40)

## முன்பள்ளி சிறாரின் ஆக்கத்திறன் காட்சி நிகழ்வு இன்று

சாவகச்சேரி, நவ.19

தென்மராட்சி வலயக் கல்வி முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வலயக்கல்வி முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி ஆங்கிலப் பாடப்பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.திருக்குமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலயக் கல்வி அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரிய ரட்ணவும், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் அதிபர் த.அம்பலவாணர், தென்மராட்சி பிரதேச செயலக ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலகர் தெய்வேந்திரம் வினோதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (7)

## கருத்தரங்கு

வரவு - செலவுத் திட்டம் - "2017 முன்மொழிவுகள்: சவால்களும் சாத்தியப்பாடுகளும்" என்ற கருப்பொருளிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் இடம்பெறும்.

ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கை சர்வதேச மாக்சிய குழு ஏற்பாடு செய்துள்ளது. (இ-8)

## கால் இறுதியில் பி.வி.சிந்து!

சீன ஓபன் பாட்மிண்டன் போட்டியின் கால் இறுதி சுற்றுக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறினார்.

சீனாவின் புஸ்ஹொவ் நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற 7 ஆம் நிலை வீராங்கனை யான சிந்து தனது 2 ஆவது சுற்றில் 17 ஆம் நிலை வீராங்கனையான அமெ ரிக்காவின் பிவென் ஹெங்கை 8-21, 22-20,



21-17 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார். இந்த ஆட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. கால் இறுதி யில் சீனாவின் ஹி பிங்ஜி யோவைச் சந்திக்கிறார் சிந்து.

## 5 விக்கெட்டுக்களை இழந்து இங்கிலாந்து திணறல்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 455 ஓட்டங்களைக் குவித்தது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. ஆட்டத்தின் 3 ஆவது ஓவரை ஷமி வீசினார். இந்த ஓவரின் 3 ஆவது பந்தில் இங்கிலாந்து அணியின் தலைவர் குக் க்ளீன் போல்டானார். அடுத்து ஹமீத் உடன் ஜோ ரூட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவுக்கு தாக்குப்பிடித்து விளையா டியது. அணியின் ஸ்கோர் 51 ஓட்டங்கள் இருக்கும்போது ஹமீத் ஆட்டமிழந்தார். அதன்பின் இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக்கள் சரிய ஆரம் பித்தது. டக்வெட் (5), மொயீன் அலி (1) மற்றும் ஜோ ரூட் (53) ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் இங்கிலாந்து அணி 80 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்தது. 6 ஆவது விக்கெட்டுக்கு பென் ஸ்டோக்ஸ் உடன் விக்கெட் கீப்பர் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர். இதனால் இங்கிலாந்து அணி 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் 49 ஓவர்கள் விளையாடி 103 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்து வருகிறது.

இன்றைய ஆட்டம் தொடங்கி யதும் இந்த விக்கெட்டை விரை வில் பிரித்து விட்டால் இங்கிலா ந்து அணியை 200 ஓட்டங் களுக்குள் சுருட்டி விடலாம்.

# ஆசிய ஹொக்கி சம்மேளன கிண்ணப் போட்டி இன்று ஆரம்பம்

### இலங்கை உட்பட எட்டு நாடுகள் பங்கேற்பு



ஆசிய ஹொக்கி சம்மே ளனக் கிண்ணப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

ஹொங்கொங்கில் இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐந்தாவது ஆசிய ஹொக்கி சம்மேளனக் கிண்ணத் திற்கான ஆடவர் ஹொக்கி போட்டியில் இலங்கை அணி பங்குபற்றவுள்ளது.

இலங்கை ஹொக்கி அணியின் தலைவராக நாலன்த டி சில்வாவும் உதவி அணித் தலைவராக என். டி. பி. திசாநாயக்கவும் நியமிக் கப்பட்டுள்ளனர்.

இவர்ளை விட இலங்கை ஹொக்கி அணியில் துசித் ரட்ணசிறி, எச்.கே. தர்மரட்ண, இசன்க ஜயசுந்தர, சந்தருவன் பிரியலன்கா, மதுரங்க விஜேசிங்க, லஹிரு கிஹான் வீரசூரிய, தமித் மதுசன்க பண்டார, தரங்க குணவர்தன, லக்கான் நாணயக்கார, அசன்க வெலகெதர, அமில தயான் ரட்ணசிறி, மிக்க குணவர்தன, தரிந்து ஹேந்தெனிய, புஷ்பகுமார ஹேந்தெனிய, அநுராத சுரேஷ், மொஹமத் முலாஃபர் ஆகியோரும் இடம்பெறுள் ளனர்.

இப் போட்டியில் சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஹொங்கொங் ஆகிய நாடுகளுடன் ஒரு குழுவில் இலங்கை இடம்பெறுகின்றது.

மற்றைய குழுவில் தாய்லாந்து, உஸ்பெகிஸ்தான், பங்களாதேஷ், மெக்கௌ ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன.

அநுருத்த ஹேரத் பண்டார தலைமைப் பயிற்றுநராகவும் சாமிக்க லெனரோல் உதவிப் பயிற்றுநராகவும் செயற்படு கின்றனர்.

அணி முகாமையாளராக தமாரா லியனகேயும் அணி வைத்தியராக டாக்டர் தாமிந்த அத்தநாயக்கவும் அதிகாரியாக விங் கொமாண்டர் கங்கநாத் குலரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## விளையாட்டு மைதானம் இல்லாத நிலையிலும் உதை பந்தாட்டத்தில் சாதித்த மாணவர்கள்



இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளன மும் யாழ். மாவட்டப் பாடசா லைகள் கால்பந்தாட்டச் சம்மே ளனமும் இணைந்து நடத்திய 13 வயதுக்குட்பட்ட அணிகளு க்கான மாவட்ட மட்ட உதை பந்தாட்ட போட்டியில் நாவாந் துறை றோ.க.வித்தியாலய அணி 1 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.


இந்தப் பாடசாலைக்கென சொந்த மைதானம் இல்லாத நிலையில், பாடசாலை வளா கத்திலும் அயல் தேவாலய மைதானங்களிலும் தங்கள் பயிற்சியை மேற்கொண்டே இந்த மாணவர்கள் முதலாமி டத்தைப் பெற்றுள்ளனர்.


மைதான வசதி இல்லாத காரணத்தினால் வருடாந்த மெய் வல்லுநர் போட்டிகளைக் கூட இந்தப் பாடசாலை, அயல் கிராம மைதானத்திலேயே நடாத்தி வருகிறது.

எனவே இம்மாணவர்களின் திறமைகளை தேசியம் வரை வெளிக்கொணர்வதற்கு பாடசாலைக்குரிய மைதான வசதி பூர்த்தி செய்யப்பட உரிய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண் டுள்ளனர்.

# ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கபடிச் சுற்றுப் போட்டி;

## துள்ளுமீன் அணியை வீழ்த்தி சென். தோமஸ் 'பி' அணி முன்னிலை!



பருத்தித்துறை, நவ.19

வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கம் – சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியில் கபடிச் சுற் றுப் போட்டி கழக மைதானத் தில் இடம்பெற்று வருகிறது

நேற்று முன்தினம் ஆரம் பமான போட்டி ஒன்றில் பருத்தித்துறை முனை சென். தோமஸ் 'பி' அணி, பருத்தித் துறை துள்ளுமீன் அணியை எதிர் கொண்டது. விறு விறுப்பாக ஆரம்பித்த போட்டியில் துள்ளுமீன் அணிஆதிக்கம் செலுத்தி புள்ளிப்பட்டியலில் நீண்டநேர மாக முன்னேறிக் கொண்டே இருந்தது.

ஆனாலும் சோர்வடையாது நிலமைகளை நன்கு அவதா னித்து விளையாட்டு நுட்பங்க ளுடன் வீறுகொண்டெழுந்து சென். தோமஸ் 'பி' அணி தமக்குரியபாணியில் பல வியூகங்களை வகுத்து துள்ளுமீன் அணி வீரர்களை நிலை குலையவைத்து முன்னேறத் தொடங்கியது.

துள்ளுமீன் அணி மறுபடியும் மீள முடியாது தவித்தது. இறுதியாக சென். தோமஸ் 'பி' அணி 38:30 என்ற புள்ளிகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் தமது முதல் வெற்றியை பதிவு செய்தமைக் காக 4 புள்ளிகளுடன் 'பி' பிரிவில் பருத்தித்துறை முனை சென். தோமஸ் 'பி' அணி முன்னிலை வகிக்கின்றது. இப்போட்டியின் ஆட்டநாயக னாக பருத்தித் துறை முனை சென். தோமஸ் 'பி' அணியின் வீரர் அஜித் தெரிவுசெய்யப்பட்டார்.

## பிராட்மன் சாதனையை நெருங்கும்

# விராட் கோஹ்லி

விசாகப்பட்டினம், நவ.19

அதிக சதங்களை அடித்த தன் மூலம் விராட் கோஹ்லி ஆஸ்திரேலிய ஜாம்பவான் பிரட்மனை வேகமாக நெருங்கிவருகிறார்.





இந்தியாவுக்கு சுற்றுப பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. ராஜ்கோட்டில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா போராடி சமன் செய்தது.

இந்த நிலையில் இந்தியா - இங்கிலாந்து இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் தொடங் கியது. இந்த போட்டியில் இந்திய அணியில் தலைவர் விராட் கோஹ்லி, புஜாரா ஆகியோர் சதம் அடித்து அசத்தியிருந் தனர்.

விராட் கோஹ்லிக்கு இது 50 ஆவது டெஸ்ட் போட்டியாகும். தனது மைல்கல் டெஸ்டில் 167 ஓட்டங்களை எடுத்துள்ள விராட் கோஹ்லிக்கு இது 14 ஆவது சதமாக பதிவானது. அணித் தலைவரான பின்னர் பெற்ற 7 ஆவது சதம் இதுவாகும்.

அத்துடன் 50ஓட்டங்களைத் தாண்டி விட்டால் அதை சதமாக மாற்றும் சாதனையில் அவர் ஆஸ்திரேலிய ஜாம்பவான் டொன் பிராட்மனை வேகமாக நெருங்குகிறார். பிராட்மன் 29 சதங்களும், 13 அரைசதங்களும் அடித்துள்ளார். 50 ஓட்டங்களை 100 ஆக மாற்றக்கூடிய வித்தையில் பிராட்மேனின் சராசரி 69.05 ஆகும்.

இந்த வகையில் மேற்கிந்தியத் தீவுகள் ஜோர்ஜ் ஹெட்லி 2 ஆவது இடத்திலும் (10 சதம், 5 அரைசதம், சராசரி 66.67), விராட் கோஹ்லி 3 ஆவது இடத்திலும் (14 சதம், 12 அரைசதம், சராசரி 53.85) உள்ளனர். குறைந்தது 10 சதங்கள் அடித்தவர்களில் இருந்து இந்த புள்ளி விவரம் பெறப்பட்டுள்ளது.

சுனில் கவாஸ்கர், வி.வி. எஸ்.லட்ஸ்மண், குண்டப்பா விஸ்வநாத், பாலி உம்ரிகர், கபில்தேவ் ஆகியோருக்கு பின்னர் தனது 50 ஆவது டெஸ்டில் சதம் அடித்த இந்தியர் என்ற பெருமையை கோஹ்லி பெற்றுள்ளார்.

28 வயதான விராட் கோஹ்லி தனது கடைசி 7 சதங்களில் 6 இல் (141 ரன், 169, 147, 103, 200, 211, 151) 140 ஓட்டங்களை கடந்துள்ளார். ஆனால் முதல் 7 சதங்களில் ஒரு முறை கூட 120 ஓட்டங்களை தாண்டவில்லை.

விராட் கோஹ்லியின் தலைமையில் தொடர்ச்சியாக 19 போட்டிகளில் இந்திய அணியில் ஏதாவது ஒரு மாற்றம் செய்யப்படுகிறது. இந்த டெஸ்டில் கம்பீர், மிஸ்ரா நீக்கப்பட்டு லோகேஷ் ராகுல், ஜெயந்த் யாதவ் இடம் பிடித்தனர்.

## நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்: பாகிஸ்தான் 133 ஓட்டங்களில் சுருண்டது



கிறிஸ்ட்சர்ச், நவ.19

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாகிஸ்தான் அணி 133 ஓட்டங்களில் சுருண்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் கிறிஸ்ட்சர்ச் நகரில் தொடங்க இருந்தது. ஆனால் பலத்த மழை பெய்ததால் நாணயச் சுழற்சிகூட இடம் பெறாமல் முதல் நாள் ஆட்டம் இரத்து செய்யப்பட்டது.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பாகிஸ்தான் விக்கெட்டுகளை இழந்து திணறியது.

அந்த அணி 55.5 ஓவரில் 133 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 31 ஓட்டங்களை எடுத்தார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து தரப்பில் வேகப் பந்து வீச்சாளர் கிராண்ட் ஹோமே 6 விக்கெட் வீழ்த்தினார். டிம் சவுத்தி, போல்ட் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

அடுத்த முதல் இன்னிங்ஸை விளையாடிய நியூசிலாந்து அணி 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 104 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## ஆஸியின் தேர்வுக் குழு உறுப்பினராக சப்பல்

சிட்னி, நவ.19

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தேர்வு குழு உறுப்பினராக கிரேக் சப்பல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தேர்வு குழு தலைவராக இருந்த முன்னாள் விக்கெட் கீப்பர் ராட் மார்ஷ் தனது பதவியை நேற்று முன்தினம் ராஜினாமா செய்திருந்தார்.

ராட்மார்ஷ் ராஜினாமாவை தொடர்ந்து புதிய தேர்வு குழு தலைவர் மற்றும் புதிய உறுப்பினரை நியமிப்பது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அவசரமாக கூடி ஆலோசனை நடத்தியது.

இதில் தேர்வு குழு தலைவராக டிரேவோர் ஹான்சையும், புதிய உறுப்பினராக முன்னாள் தலைவர் கிரேக் சப்பலையும் தற்காலிகமாக நியமிக்க முடிவானது.

## முதல் இன்னிங்ஸில் 455 ஓட்டங்களைக் குவித்து இந்தியா!

விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் 2 ஆவது டெஸ்டில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 455 ஓட்டங்களைக் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்துள்ளது.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் விசாகப்பட்டினத்தில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த இந்தியா, முதல் நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 317 ஓட்டங்களைக் குவித்தது. புஜாரா 119 ஓட்டங்களைக் குவித்து ஆட்டம் இழந்தார்.

விராட் கோஹ்லி 151 ஓட்டங்களுடனும், அஸ்வின் 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய விராட் கோஹ்லி 167 ஓட்டங்களை எடுத்த நிலையில் மொயீன் அலி பந்தில் ஆட்டம் இழந்தார். அப்போது இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 351 ஆக இருந்தது.

அடுத்து வந்த சகா 3 ஓட்டங்களுடனும், ஜடேஜா ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் மொயீன் அலி பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்கள். இதனால் இந்தியா 363 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட்டுக்களை இழந்தது.

8 ஆவது விக்கெட்டுக்கு அஸ்வின் உடன் புதுமுக வீரர் ஜயந்த் யாதவ் ஜோடி சேர்ந்தார். இருவரும்




சிறப்பாக விளையாடினார்கள். இதனால் 2 ஆவது நாள் மதிய உணவு இடைவேளை வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர். இந்தியா மதிய உணவு இடைவேளை வரை 7 விக்கெட் இழப்பிற்கு 415 ஓட்டங்களைக் குவித்திருந்தது. அஸ்வின் 47 ஓட்டங்களுடனும், ஜயந்த் ஜாதவ் 26 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்த பின் ஆட்டம் தொடங்கியது. மொயீன் அலி வீசிய 121 ஆவது ஓவரின் முதல் பந்தில் பவுண்டரி அடித்து அஸ்வின் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 58 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பென் ஸ்டோக்ஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். ஜயந்த் யாதவ் 35 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இந்தியா 455 ஓட்டங்களைக் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

கடைசி விக்கெட்டாக உமேஷ் யாதவ் 13 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க, ஷமி 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து அணி சார்பில் ஆண்டர்சன், மொயீன் அலி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களும், ரஷித் 2 விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

# நாடாளுமன்றில் தலைகுனிந்த விமல் வீரவன்ஸ



2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் வாக்கெடுப்பு நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது. இதன் போது, வாக்களிப்பதற்கு விமல் வீரவன்ஸவின் பெயர் அழைக்கப்பட்டதும் 'வயக்கரா.. வயக்கரா..' என நாடாளுமன்ற உறுப்பினர்களினால் கூச்சலிடப்பட்டது.

இதனால் பெரும் சங்கடத்திற்கு முகம்கொடுத்த வீரவன்ஸ, வாக்கெடுப்பின் போது கடும் சிரமத்திற்கு மத்தியில் அமர்ந்திருந்ததார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விமல்வீரவன்ஸவின்ஹோகந்தர வீட்டில் அண்மையில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது குறித்த இளைஞன் அதிகளவான வயக்கரா மாத்திரைகளை உட்கொண்டதால் இது நேர்ந்ததாக விசாரணைகளில் தெரியவந்ததாம். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இளைஞனின்மரணம்தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரச்சாரங்களால் வீரவன்ஸ மனரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

## 'காலப்பழி' கவிதை நூல் வெளியீடு

உடுப்பிட்டி, நவ.19

யாத்ரிகனின் 'காலப்பழி' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3.30மணிக்குஉடுப்பிட்டி மகளிர்கல்லூரியில்த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலாளர் சிவஸ்ரீ நூலை வெளியிட்டு வைப்பார். கவிஞர் கருணாகரன் நூல் வெளியீட்டுரையையும் தி.செல்வமனோகரன், இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் யாத்ரிகன் நூலின் ஏற்புரையையும் நிகழ்த்துவர். (இ-7)

## சேவை நயப்பு விழா

வவுனியா, நவ.19

வவுனியா நகர கிராம உத்தியோகத்தர் வீரவாகு ஜெக சோதிநாதன் 35 வருட அரச சேவை நிறைவையொட்டி சேவை நலன் பாராட்டும், பிரியாவிடை விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு, வவுனியாவெளிவட்ட வீதி ஸ்ரீசிந்தாமணி பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வு வவுனியா பிரஜைகள் குழுமத் தலைவர் தா.சலசலோசன் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நல்லாட்சி அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

2017ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்தில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன எனநிதிஅமைச்சர்ரவிகருணாநாயக்க தனது உரையில் கூறியிருந்தார். சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்ற போதும் அந்த சலுகைகளை எவ்வாறு நடைமுறை ரீதியில் வழங்க முடியும் என்ற கேள்வி எமக்குள்ளது.

யுத்தம் நிறைவடைந்து ஏழாண்டுகள் ஆகின்ற போதும் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் மொத்த ஒதுக்கீட்டில் 21.8சதவீதம் பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களின் வரிப்பணத்தில் 21.8 சதவீதம் பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை குறித்து நாம் வரவேற்பைத் தெரிவிக்கிறோம். அதே நேரம் மாகாண சபைக்கான ஒதுக்கீடுகளைப் பார்க்கின்ற போது அனைத்து மாகாண சபைகளுக்கும் சிறுசிறு வித்தியாசத்துடன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இரு மாதங்களுக்கு முன்னதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாம் சந்தித்திருந்த போது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவையாகும், ஆகவே அந்த மாகாணங்களின் அனைத்துத் தேவைகளையும் கருத்திற்கொண்டு அதற்கான ஒரு மதிப்பீட்டைச்செய்து ஒருங்கிணைந்த ரீதியிலான செயற்றிட்டத்தை முன்வைக்கவேண்டுமென நாம் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் அவ்வாறானதொரு செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

வடக்குக்கும் கிழக்குக்கும் தனியான தோர் அபிவிருத்திச் செயற்றிட்டம் அவசியம் என எமது தலை வரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் இந்த சபையில் வலியுறுத்தியிருந்தார். ஆகவே அந்த விடயம் தொடர்பாக அரச தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

ஒட்டுமொத்தமாக இலங்கையில் 2.1வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களில் 1.2சதவீதமானவர்கள் 2 டொலர்களுக்கும் குறைவான வருமானத்தையே நாளொன்றுக்குப் பெறுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கையில் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் எமது மக்களில் இலட்சக்கணக்கானவர்கள் அகதி முகாம்களிலும் நண்பர்களினுடைய வீடுகளிலும் இன்றும் வசித்து வருகின்றார்கள். அவர்கள் தமது சொந்த நிலத்தில் குடியேறுவதற்காக காத்திருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் விசேடமாக வடக்கு மாகாணத்திலிருந்து மரக்கறிகள், கடலுணவுகள் எனச் சுமார் 300 லொறிகள் நாளொன்றுக்கு தென்னிலங்கை நோக்கி வருகைதந்து விற்பனைசெய்யும் நிலைமை இருந்தது. ஆனால் இன்றைய காலத்தில் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

வடக்கு, கிழக்கில் மீன்பிடித் துறைகள் கடற்படையினரின் பிடியில் இருக்கின்றன. பொதுமக்களின் விவசாய நிலங்கள் இராணுவத்திடம் உள்ளன. இவற்றுக்கு மேலாக தென்னிலங்கையிலிருந்து வரும் வியாபாரிகளின் விற்பனைநிலையங்கள் வடக்கை ஆக்கிரமித்துள்ளன.

இவ்வாறான நிலையால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களில் அதிகமானோர் இரண்டு டொலருக்கும் குறைவான வருமானத்தையே பெறுகின்றார்கள். இந்நிலையில் சராசரியாகப் பொதுமக்கள் மாதமொன்றுக்கு நாற்பத்தோராயிரம் ரூபா வருமானமாக பெறுகின்றார்கள் என்பதை வடக்கு - கிழக்கை மையமாக வைத்துப் பார்க்கையில் ஏற்றுக் கொள்ள முடியாது. விசேடமாக யுத்தத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் குடும்பங்களுக்குத் தலைமைத்துவத்தைத் தாங்கவேண்டிய துரதிஷ்டமான நிலைமை உள்ளது.

அவர்கள் தொழில் வாய்ப்புக்களுக்காக- அன்றாட வாழ்வாதாரத்துக்காக மிகவும் கடினமான நிலைமையில் இருக்கின்றார்கள். அதற்காக விசேட செயற்றிட்டங்களை இந்த வரவு- செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தவில்லை என்பதையிட்டு நாம் கவலை அடைகின்றோம்.

போரின் போது ஊனமுற்ற படைவீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக அரசு உறுதிமொழிகளை வழங்குகின்றது. ஆனால் எமது பகுதிகளில் யுத்தத்தின் காரணத்தால் அவயவங்களை இழந்த ஆண்களும், பெண்களும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாது திண்டாடுகின்றனர். அவர்களுக்கு அரசு என்ன பதிலளிக்கப் போகின்றது? அவர்களுக்கு எவ்வாறானஉதவிகளை வழங்கப் போகின்றது?

வடக்கு, கிழக்கில் தற்போதும் படையினரின் ஆக்கிரமிப்பு தொடர்ந்த வண்ணமேயுள்ளது. பௌத்தர்கள் வாழாத இடத்தில் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றன. பௌத்த விகாரைகள் அமைக்கப்படும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

குறிப்பாக எனது சொந்தப் பகுதியான வலி.வடக்கில் அண்மையில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதியில் இந்து ஆலயம் காணப்பட்ட இடத்தில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று தான் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும், திருகோணமலையிலும், நயினாதீவிலும் நிலைமைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

பௌத்தர்கள் வாழாத இடத்தில் ஏன் இவ்வாறான விகாரைகளும், புத்தர் சிலைகளும் என்ற கேள்வி எமது உறுப்பினர்களால் எம்மிடத்தில் கேட்கப்படுகின்றது. இதனை நல்லிணக்கம் பற்றிப் பேசும் அரச தரப்பினராகிய நீங்களே தடுத்து நிறுத்த வேண்டும்.

தற்போது மட்டக்களப்பில் ஒரு பௌத்த தேரர் மிகவும் மோசமாக இனவாதத்தைத் தூண்டும் வகையில் - சிறுபான்மையினரை அச்சுறுத்தும் வகையில் - நடக்கின்றார். இதுபோன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் மோசமான நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டு விடும்.

நீண்டகாலமாக தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை ஏற்படுத்துமாறு நாம் தொடர்ந்து போராடி வருகின்றோம். நியாயமான அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டும் என்று சர்வதேச சமுகத்திடம் கோரி நின்றோம்; வலியுறுத்தினோம். அதன் பிரகாரம் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் அரசமைப்பு சபையாக மாற்றப்பட்டுள்ளது. இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றாகஇணைந்துஆட்சியமைத்துள்ளன. ஒற்றையாட்சிக்குள் எமது மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த முடியாது என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். அதன் காரணத்தால் தான் சமஷ்டி முறைமையிலான தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

இந்த நாட்டில் கடந்த காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவால் கொண்டுவரப்பட்ட போதும் அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்குவதற்காக முன்னோக்கிச் செல்லவேண்டுமென்றே கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சந்திரிகா அம்மையாரின் காலத்தில் கலாநிதி நீலன் திருச்செல்வமும் தற்போது திசைமாறிப்போயுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரீஸும் இணைந்து 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற வகையில் அதிகாரங்கள் பகிரப்பட்ட தீர்வுத் திட்ட வரைபொன்றைக் கொண்டு வந்தார்கள். அதனை ஐக்கிய தேசியக் கட்சியினர் எதிர்த்தனர்.

தற்போது நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எமது மக்களின் கோரிக்கைகள் ஆட்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரமே எமது மக்கள் அவர்களுக்கான ஆணையை வழங்கினார்கள். அதன் காரணத்தால் நாம் தேசிய அரசுக்கு ஆதரவளித்து வருகின்றோம்.

எமது மக்கள் சுதந்திரமாகவும் - நிரந்தர பாதுகாப்போடும் வாழ்வதற்காக - இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைப் புதிய அரசமைப்பின் ஊடாக வழங்க வேண்டும். அதுவே எமது நம்பிக்கை. நாளைய தினம்(இன்று) அரசமைப்பின் வழிநடத்தல் குழுவின் உபகுழுக்களின் முக்கிய ஆறு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அது குறித்து எமக்குப் பெரும் எதிர்பார்ப்புக்கள் உள்ளன.

எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையில் எவ்வாறு வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவளிப்பது என எமது உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினார்கள். இருப்பினும் தற்போது ஏற்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது மக்களின் அரசியல் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும்என்றஒரேநோக்கத்துக்காகவே நாம் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளோம். தேசிய அரசின் மீது எமக்கு இன்னமும் நம்பிக்கை உள்ளது.

அதேபோன்று எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றபோது எமது சகோதர இனமான முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு அவர்களுக்கான அரசியல் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அவர்களுடன் இணைந்து உரிமைகளை வென்றெடுப்பதற்கான அந்த மக்களின் தலைவர்களுடன் நாம் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம். அரசு நீதியாகச் செயற்பட்டு எமது விடயங்களுக்காக நியாயமான தீர்வொன்றை வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

எமது கணிப்பின் பிரகாரம் யுத்ததால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்தைப் பூர்த்திசெய்வதற்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் தேவையாகவுள்ளன. அவ்வாறிருக்கையில் 5 ஆயிரம் வீடுகளுக்குத் தான் நிதி அமைச்சர் 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளார்.

மறுபக்கத்தில் எமது மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் அக்கறை செலுத்தி வரும் நாம் தற்போதைய ஆட்சியில் உள்ள மீள்குடியேற்ற அமைச்சர் மீது நம்பிக்கையிழந்துள்ளோம். எமது மக்களின் தேவைகள் சரியாக மதிப்பிடப்படவில்லை. மீள்குடியேற்ற அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாதுள்ளது.

ஜேர்மன், ஜப்பான் தூதுவர்கள் எம்மைச் சந்தித்தபோது அரசு உங்களுடன் இணைந்துதான் அபிவிருத்தி மற்றும் மக்களுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றதா எனக் கேட்டனர். எமது மக்களுக்காக எம்மையும் திட்டங்களை முன் வைக்குமாறு கூறினர்.

நாட்டில் யுத்தம் இல்லை. நல்லிணக்கம் இருக்கின்றது என்ற நம்பிக்கையுடன் நாம் செயற்படுகின்றோம். வடக்கின் மீள்குடியேற்றத்துக்காக 65 ஆயிரம் பொருத்து வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் முயற்சிக்கின்றார்.

அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. அதில் உள்ள குறைபாடுகளை எமது உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார். நாம் மட்டுமல்ல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கூட அத்திட்டத்தை விரும்பவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பொது அமைப்புகள் கூட அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

65 ஆயிரம் வீடுகளை தலா 21 லட்சம் ரூபா செலவில் கட்டத் தேவையில்லை. மக்கள் அத்திட்டத்தை விரும்பவில்லை. வடக்கு கிழக்கின் பல மாவட்டங்களிலும் மக்கள் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். குறித்த செலவினத்திலும் பார்க்கையில் குறைந்த செலவினத்தில் சிமெந்தினால் வீடுகளைக் கட்டமுடியும்.

65 ஆயிரம் இரும்பிலான பொருத்து வீட்டுத்திட்டத்தை முன்னெடுக்கும் செலவினத்தில் உண்மையில் ஒரு லட்சத்து 2 ஆயிரம் வீடுகளைக் கட்ட முடியும். இதனை அமைச்சர் சுவாமிநாதன் ஏன் ஏற்க மறுக்கின்றார்?

பொதுமக்களுக்கு பொருத்தமற்ற பொருத்து வீடுகளை ஏற்குமாறு அமைச்சர் சுவாமிநாதன் எமது உறுப்பினர்களை தொலைபேசியில் வற்புறுத்துகின்றார். அவர் இந்த வீடுகளை ஏற்க வைப்பதற்காக ஒரு ஏஜெண்ட் (ஒரு முகவர்) போன்று செயற்படுகின்றார். அது மிகவும் கவலையளிக்கும் விடயமாகவுள்ளது.

இவ்வாறான நிலையில் நாம் மீள்குடியேற்ற அமைச்சு மீதான விவாதத்தின் நிறைவில் நடைபெறும் வாக்கெடுப்பில் அவ்வமைச்சுக்காக ஆதரவளிக்கத்தான் வேண்டுமா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம். - என்றார்.

# ரூ.500, 1000 நோட்டு விவகாரத்தால் இந்தியாவில் பெரும் அரசியல் நெருக்கடி

### ஜனாதிபதி முகர்ஜி – பிரதமர் மோடி நேற்று அவசர சந்திப்பு

புதுடெல்லி,நவ.19

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவரும் ஜனாதிபதியுமான பிரணாப் முகர்ஜியை நேற்று வெள்ளிக் கிழமை மாலை அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் 500 ரூபா மற்றும் 1000 ரூபா நோட்டுக்கள் செல்லாது என்று பிரதமர் மோடியின் அரசு திடீரென அறிவித்தமையால் மக் கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் மோடி அரசுக்கு எதிராக போராட்டங்கள் வெடிக்கக் கூடிய அபாயம் நிலவுவதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, மத்திய அரசின் இந்தத் திடீர் நடவடிக்கையால் கடும் அதிருப்தி அடைந்துள்ள எதிர்க்கட்சிகள், இது தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்பியுள்ளன. இதனால் இரண்டு நாள்களாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடங்கியுள்ளன.

மம்தா பனர்ஜி தலைமையில் அனைத்துக் கட்சி தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்து, ரூபா நோட்டு செல்லாது என்ற அறிவிப்பை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கும்படி முறையிட்டனர்.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், பிரதமர் மோடி நேற்று மாலை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார்.

இந்தச் சந்திப்பின்போது, பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்கவும், நாடு முழுவதும் பணம் தாராளமாக கிடைக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து பிரதமர் மோடி ஜனாதிபதியிடம் விளக்கினார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பொருளாதாரம், நிதி நிலைமை மற்றும் சந்தை நிலைவரம் என்பன விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்ப அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளார் என தெரியவருகின்றது. (ம)

## இலங்கைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"எங்கள் தூதரகம் இந்த விவகாரம்பற்றி விசாரித்துள்ளது. இந்தத் தாக்குதலை இலங்கைக் கடற்படைதான் நடத்தியது என்று கூறுவதற்குஎந்தசாட்சியங்களும் இல்லை." என்று அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படைதான் தங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறுகின்றனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## வலி.கிழக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருபவை வருமாறு:-

மேற்படி பாடசாலையில் தொழில்நுட்ப அறையில் பரீட்சையொன்றுக்கு தோற்றிக்கொண்டிருந்த க.பொ.த உயர்தர மாணவன் ஒருவரை, அவருக்கு உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் கடுமையாகத் தாக்கினார்.

இதில் காயமடைந்த மாணவன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட நிலையில், அதே ஆசிரியர்,தொழில்நுட்பஅறையில் இருந்த ஏழு மாணவர்களையும் அவர்களுக்குகற்பித்துக்கொண்டிருந்த ஓர் ஆசிரியரையும் அந்த அறைக்குள் வைத்துப் பூட்டினார். அதன் திறப்பையும் தானே வைத்திருந்தார்.

நீண்ட நேரமாக அவர் திறப்பைக் கையளிக்க மறுத்ததால், இந்த விடயம் அச்சுவேலி பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. சிவில் உடையில் பாடசாலைக்குச் சென்ற பொலிஸார் அந்த ஆசிரியருடன் சுமுகமாகப் பேசி திறப்பைப் பெற முயன்றனர்.

ஆனால், அவர் அதற்கு இணங்கவில்லை. இதனால் சீருடையில் சென்ற பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவரிடம் இருந்து திறப்பைப் பெற்ற பொலிஸார் பாடசாலை நிர்வாகத்திடம் அதனைக் கையளித்தனர்.

அந்த ஆசிரியர் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேற்படிச் சம்பவங்களால் நேற்று அந்தப் பாடசாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ம-09)

## மூன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்கள், அரசாங்கத்தில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் வரவு–செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பனவும் ஆதரவாக வாக்களித்தன.

கூட்டு எதிர்க்கட்சியினரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் எதிராக வாக்களித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. (ம)

## தாலி அறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் உரும்பிராய் திருஞானசம்பந்த வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த லோகநாதன் ஜீவா என்ற குடும்பப் பெண்ணே பாதிக்கப்பட்டிருக்கின்றார்.

சம்பவ நேரம் மழை பெய்து கொண்டிருந்தது. குறித்த பெண் தனது பிள்ளைகளுடன் வீதியால் சென்றுகொண்டிருந்தார். இதன் போது தலைக்கசவம் அணியாமல் – மது போதையில் – மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அந்தப் பெண்ணின் தாலிக் கொடியை அறுத்தெடுத்தனர்.

பின்னர் தோடுகளைக் கழற்ற முற்பட்டபோது அந்தப் பெண் கூக்குரல் இட்டவாறு எதிர்ப்புக் காட்டினார். இதனால், கொள்ளையர்கள் காதோடு சேர்த்து தோட்டினை இழுத்தனர். தோடு கொள்ளையர்களின் கைக்குச் சென்றது. பெண் காதில் காயமடைந்தார்.

அவர் அணிந்திருந்த ஐந்தரைப் பவுண் தாலிக்கொடியும் பெறுமதிமிக்க தோடும் பறிபோனது.

காயமடைந்த பெண் பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-24)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர்கள் நேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை புதுடில்லியில் நேரில் சந்தித்து முறைப்பாடு செய்தனர்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைப் படையினரின் தாக்குதல்கள் தொடர்பில் தங்களின் கடும் ஆட்சேபத்தை பிரதமர் மோடியிடம் தெரிவித்த அவர்கள் இது தொடர்பில் மனு ஒன்றையும் பிரதமரிடம் கையளித்தனர்.

"இந்தத் தாக்குதல் சம்பவம் மிகவும் பாரதூரமானது. ஆகவே இலங்கைத் தூதுவரை இந்திய மத்திய அரசு நேரில் அழைத்து தமது ஆட்சேபத்தை உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்" – என்று அவர்கள் பிரதமர் மோடியைக் கோரினர்.

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே நீதியமைச்சர் இவ்வாறு கூறினார்.

எனினும், 'இன்று முதல் இனவாத அடிப்படைவாத செயற்பாடுகளுக்கு நாட்டில் இடம் கிடையாது' என்றும் நேற்று அவர் நாடாளுமன்றில் உறுதியளித்தார்.

இதேவேளை, கடந்த ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுத்தாக்குதலில் அந்த அமைப்பில் செயற்பட்ட இலங்கையரான ப்ராஸ் சுபையா முஷின் (அபு சுபையா சிலானி – வயது-37) என்ற கராட்டி பயிற்சியாளர் கொல்லப்பட்டார் என இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் தலைவர் என்ற வகையில் அக்குழுவின் சிறிய – பூர்வாங்க – இடைக்கால அறிக்கை ஒன்றையும் அவர் இன்று முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இடைக்கால அறிக்கைகள் இன்று முன்வைக்கப்பட்டாலும் சபையில் அவ்விடயங்கள் குறித்து விவாதம் ஏதும் நடைபெறாது. அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் இன்றைய அமர்வு ஒத்திவைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழிகாட்டல் குழுவின் விரிவான இடைக்கால அறிக்கையை டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் ஒரு தினத்தில் பிரதமர் சமர்ப்பிப்பார் எனவும் அப்போது இந்த அனைத்து இடைக்கால அறிக்கைகள் மீதும் அரசமைப்புச் சபை விரிவான விவாதம் நடத்தும் என்றும் கூறப்படுகிறது.(உ)

# வவுனியாவில் மூன்று நாட்கள் அவ்வப்போது மின்தடை வரும்

வவுனியா கிறிட் (Grid)உப மின் நிலையத்தில் செயற்படுத்த வேண்டிய திடீர் திருத்த வேலை காரணமாக ஏற்கனவே அறிவிக்கப் பட்டதற்கு மேலதிகமாக மேலும் பல இடங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரையான 3 தினங்கள் அவ்வப்போது மின்சாரம் தடைப்படும்.

வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக் கற்குண்டமடு வரை, மதவுவைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவப்புளியங்குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை–

நெளுக்குளத்திலிருந்து பெரிய நொச்சிக்குளம் வரைக்கும், நேரியகுளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, வெளிக்குளம், தெற்கிலுப் பைக்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, மடுக்கந்தவிலிருந்து துட்டுவாகை வரை, நெடுங்குளம், கருவேலப் புளியங்குளம், மலையா பருத்திக்குளம், மாமடுவவிலிருந்து பதவியா வரை.

வவுனியா வைத்தியசாலை, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்று முறிப்பு விமானப்படை முகாம், மண்டரின் காமெண்ட்ஸ் , கேளலூம் காமெண்ட்ஸ், இரட்டைப் பெரிய குளம், இராணுவ முகாம், பூஓயா இராணுவ முகாம், எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, ஓவியா விடுதி, லங்கா அரிசி ஆலை, குளோப் அரிசி ஆலை, சி.இ.சி. கல்லுடைக்கும் ஆலை, மடுக்கந்த தொலைத் தொடர்பு நிலையம், பிரசன்னா கல்லு டைக்கும் ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகாச் சக் கொடிய கல்லுடைக்கும் ஆலை, குருமன்காடு யு.என்.எச்.சி. ஆர்., அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, சிறிரங்கம் அரிசி ஆலை, தெய் வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வின் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிக்குளம் தொலைத் தொடர்புக் கோபுரம், செட்டிக்குளம் வைத்திய சாலை, செட்டிக்குளம் ப.நோ. கூ. சங்கம் ஆகிய இடங்களில்

நாளை ஞாயிற்றுக்கிழமை, நாளை மறுதினம் திங்கள் மற்றும் 22 ஆம் திகதி செவ்வாய் ஆகிய தினங்களில் மின் விநியோகம் சில சந்தர்ப்பங்களில் சீரற்றதாகக் காணப்படும்.

திருத்த வேலைகள் முடிவுற்றவுடன் உடனடியாக மீள்நிலைக்குத் திரும்பும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

## மத அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய மத அடிப்படை வாதப் போக்குமூலம் இனப்பதற்றத்தை ஏற்படுத்துவோர் விடயத் தில் அரசு வாளாவிருக்கின்றமை குறித்து பல தரப்புகளாலும் அதிருப்தி வெளியிடப்பட்டுவரும் பின்னணியிலேயே நீதியமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் இந்த அறிவிப்பை விடுத்தார்.

"இந்த நாட்டில் பிக்குகளுக்கென்றும் பொது மக்களுக்கென்றும் தனியான சட்டம் கிடையாது.

"எமது சில பிக்குகள் பௌத்த மதத்துக்குப் பொருந்தாத வகையில் தூஷண வார்த்தைகள் பேசிக் கொண்டு தேவையற்ற சண்டித்தனத்துடன் செயற்படுகின்றனர். இதனை பௌத்த மக்கள் அனுமதிப்பதில்லை. இத்தகையவர்கள் இனவாதத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

"இதேபோன்று, நாட்டில் தௌஹீத் ஜமாஅத் என ஓர் அமைப்பு காணப்படுகின்றது. இதன் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் ஒருவர் பௌத்த மதத்தை பாரதூரமான முறையில் நிந்தனை செய்யும் விதத்தில் பேசியுள்ளார். இவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

"இனிமேல் இத்தகைய நடவடிக்கைகள் பொறுத்துக் கொள்ளப்படமாட்டா. அரசு அவற்றைப் பார்த்து சகித்துக் கொண்டிராது. உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றார் நீதியமைச்சர். (உ)

# அரச பணியாளர்களின் தொகை மதிப்பீடு பூர்த்தி

அரச மற்றும் பகுதி அரச சார்பு சேவையில் ஈடுபடுவோர் தொடர்பான தொகைமதிப்பீட்டுப்பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற இந்தக் கணக்கெடுப்புக்கள் பூர்த்தி அடைந்துள்ளன என புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்தரசிங்க தெரிவித்தார்.

இந்தக் கணக்கெடுப்பின் போது ஊழியர்களின் கல்வி, மொழி, தகவல் ஆகியன தொடர்பான விடயங்களும் திரட்டப்பட்டன.

இந்தக் கணக்கெடுப்புப் பணிகளின் போது தகவல்களைப் பெற்றுக் கொடுத்த அனைத்து ஊழியர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.






இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.